DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
Ragu Thillainathan Sales Representative homesbyraghu@gmail.com

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP REAL ESTATE PROFESSIONALS
வீடு வாங்க விற்க!
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
ROYAL LePAGE ignite
795 MILNER AVE, TORONTO, ON M1B 3C3

Dominion Lending Centres
✓ FIRST MORTGAGE
✓ SECOND MORTGAGE
✓ REFINANCE
SUJAN SIVARAJAH MORTGAGE AGENT LEVEL 1 416.302.5555

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc., Brokerage
Raj Perampalam Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
* Family sponsorship;
* Super visa for parents and grandparents including health insurance;
* Citizenship;
* Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

உதயம் 1559 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday February 20, 2026

## “We are living through a hinge moment for Canada’s economy and our place in the world"

### - Canada's Minister of Energy and Natural Resources Hon Tim Hodgson

# கனடா, இந்தியா, நமது பொருளாதாரத்திற்கான ஒரு முக்கிய தருணம்

## கனடிய எரிசக்தி மற்றும் இயற்கை வள அமைச்சர் ரிம் ஹொட்க்சன் தெரிவிப்பு



கனடாவின் பொருளாதாரம் மற்றும் உலகில் எமது தேசத்தின் இடம் குறித்த ஒரு முக்கிய தருணத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

எமது பிரதமர் அண்மையில் ல் டாவோஸில் கூறியது போல், இது ஒரு முறிவு மட்டுமே!, மாற்றம் அல்ல. உலகளாவிய வர்த்தகம், பன்முகத்தன்மை, எரிசக்தி பாதுகாப்பு மற்றும் பொருளாதார கூட்டாண்மைகள் பற்றிய நீண்டகால அனுமானங்கள் இனி நிலைத்திருக்கப்போவதில்லை

பழைய ஒழுங்கு மீண்டும் வரப்போவதில்லை, மேலும் ஏக்கம் ஒரு உத்தி அல்ல. எனவே கனடா எதிர்கொள்ளும் கேள்வி நேரடியானது: நாம் எவ்வாறு பதிலளிப்பது? என்பது மிகவும் முக்கியமானது எனது அண்மைய இந்தியா பயணம் எங்கள் பதிலின் ஒரு பகுதியாக இருந்தது.

இவ்வாறு கனடாவின் எரிசக்தி மற்றும் இயற்கை வள அமைச்சர் ரிம் ஹொட்க்சன் தெரிவித்துள்ளார். கனடாவின் பல்லின ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேற்படி விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# ஸ்காபுறோ "தமிழ்ச் சமூகம் மையம்" நிதியத்திற்காக மொன்றியால் நகருக்குச் சென்று ஒரு இலட்சத்திற்கு அதிகமான இரண்டு காசோலைகளைப் பெற்ற சாந்தா பஞ்சலிங்கம்!







ஸ்காபுறோ “தமிழ்ச் சமூகம் மையம்” நிதியத்திற்காக மொன்றியால் நகருக்குச் சென்று ஒரு இலட்சத்திற்கு அதிகமான இரண்டு காசோலைகளைப் பெற்ற சாந்தா பஞ்சலிங்கம் மிகுந்த உற்சாகத்தோடு கடந்த 13-02-2026 அன்று வெள்ளிக்கிழமை ரொறன்ரோ திரும்பினார் அவரது முயற்சிகளின் விளைவாகவும் அவரோடு இணைந்து அவ்வப்போது செயற்படுகின்ற நண்பர்கள் சிலரின் உந்துதலோடு மொன்றியால் மாநகர் வாழ் தொழிலதிபர்களில் ஒருவரான முத்தையா ராஜ்கோபால் வழங்கிய 10040.00 டாலர்களுககுரிய காசோலையை சாந்தா பஞ்சலிங்கம் தமிழ்ச் சமூக மையத்தின் சார்பில் அவரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

அத்துடன் அன்றைய தினம் மொன்றியாலில் **JAY FINANCIAL SERVICES** நிதி நிறுவன அதிபர் நிரோசன் தனது தந்தையான அமரர் சந்திரமூர்த்தி குடும்பத்தின் சார்பில் வழங்கிய 10000 டாலர்களுக்குரிய காசோலையையும் சாந்தா பஞ்சலிங்கம் பெற்றுக்கொண்டார்.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St. East Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

தமிழில் உரையாடி உங்கள் நெருக்கடியான நேரத்தில் எமது சேவைகளை பூரண திருப்தியுடன் பெற்றுக்கொள்ளுங்கள்
SMART RESTORATION
We work with your insurance company
ARUN ANANTH
24/7 EMERGENCY SERVICES
info.smartrestoration@gmail.com
smart-restoration.net
647-849-4444 (Cell)
1-833-SMART 09 (Office) (76278)
Water and flood services • Mold remediation • Trauma • Sewage cleanup • Fire & smoke • 24/7/365 days
LICENSED INSURED CERTIFIED

GL PRIME LEGAL SERVICES
இலவச சட்ட ஆலோசனை 905 334 6851
Immigration Law | Family Law | Criminal Law
• PR APPLY • SPONSORSHIPS • WORK PERMIT
• SUPER VISA All Other Legal Services
www.glprimelegal.ca ERAA PLAZA Unit #231


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
100
Canada
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

Canada — We acknowledge the financial support of the Government of Canada

## கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும் நூல்களின சங்கமம் (நூல் கண்காட்சி) - 2026

காலம் - **ஜூன். 21. 2026 - ஞாயிற்றுக்கிழமை**
(காலை 10 மணி முதல் மாலை 6 மணிவரை )
இடம் - **தமிழிசைக் கலாமன்றம்**
1120 Tapscott Rd Scarborough ON

படைப்பாளிகள் தங்கள் நூல்களை ' நூல்களின சங்கமம்' நிகழ்வில் காட்சிப் படுத்தவும், விற்பனை செய்யவும் முடியும். அதற்கான கட்டணம் முப்பது கனடிய டொலர்கள் ($ 30.00) மட்டுமே. அத்துடன் இணைந்ததாக, நூல் அறிமுகம் அல்லது வெளியீடு செய்வதாயின் 30 நிமிடங்கள் தரப்படும். அதற்கான மேலதிக கட்டணம், கனடிய டொலர்கள் நாற்பது ($ 40.00) ஆகும். இந்தக் கட்டணத்துடன் எத்தனை நூல்களையும் காட்சிப்படுத்தி விற்பனை செய்யலாம்.

### விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர் -- ------------------------------------------------

தொலைபேசி எண் -- ------------------------------------------------

மின்னஞ்சல் -- ------------------------------------------------

நூல்களின் பெயர்கள் -- ------------------------------------------------
------------------------------------------------
------------------------------------------------

அ) காட்சிப்படுத்தல் / விற்பனை ---------------------------- (30$) --------

ஆ) நூல் அறிமுகம் / வெளியீடு ---------------------------- (40$) --------

காட்சிப்படுத்தும் நூல்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாவார்கள். இன, மத முரண்பாட்டை தோற்றுவிக்கும் நூல்கள் அனுமதிக்கப்பட மாட்டாது. வெளிநாடுகளில் வாழும் எழுத்தாளர்கள் தங்கள் நண்பர்கள் உறவினர் ஊடாக பங்கு கொள்ளலாம்.

படைப்பாளிகள் அனைவரும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம். நன்றி.

அன்புடன்
நிர்வாக சபை - கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்.

தொடர்புக்கு - ரவி கனகசபை ( தலைவர்) - 416 301 9027
- முனைவர் வாசுகி நகுலராஜா ( செயலாளர்) - 647 208 4148

உதயன் கதிரோட்டம்

# "ஒற்றுமையே பலம்" என்ற ஒரு கொடியின் கீழ் திரண்டு "தமிழ்ச் சமூக மையம்" கம்பீரமாய் எழுந்து நிற்கும் வகையில் எல்லையைத் தாண்டி நிதியைத் திரட்டிய பெருமையோடு தமிழ்க் கனடியர்கள்!

கனடா என்னும் பனி பெய்யும் குளிர் (திரு)நாட்டில் எம் தமிழ் மக்களின் இருப்பு ஆரம்பமாகி ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன என்று கணக்கிட்டுச் சொல்லும் வகையில் 1975ம் ஆண்டுக்கு முன்னர் இங்கு காலபதித்தவர்களும் உள்ளார்கள். இவ்வாறாக அன்று ஆரம்பித்த ஈழத் தமிழர்களாகிய எமது கனடியக் கால்பதிப்பு 1980க்குப் பின்னர் மிகவும் வேகமாக இடம்பெற்றது எனலாம். எமது மண்ணில் எமது இளைஞர்களிடையே தோன்றிய விடுதலை உணர்வு சார்ந்த போராட்டம் கூர்மையடைந்து அங்கு எம் இனத்தின் மீது ஏவிவிடப்பெற்ற அடக்கு முறைகள் மற்றும் கைதுகள் போன்றவை எமது மக்கள் அந்த மாங்கனித் தீவை விட்டு வெளிநாடுகளுக்குச் செல்லும் நிர்ப்பந்தத்தை உண்டாக்கியது.
இவ்வாறாக போதிய கல்வித் தகைமைகள் உள்ளவர்களும் அவ்வாறு கற்கை நெறிகளை தொடர முடியாதவர்களும் இங்கு வந்து அரசாங்கத்தின் சட்டங்களுக்கு ஏற்ப தங்கள் நிரந்தர வதிவிடமாக இந்த மண்ணில் சங்கமமாகிவிடத் தொடங்கினார்கள். இன்னொரு பக்கத்தில் கல்வியறிவு அற்றவர்களைக் கூட தங்கள் சொந்த நாட்டில் நிம்மதியாக வாழ பாதுகாப்பு இல்லை என்ற காரணங்களுக்காக அகதிகளாக ஏற்று அவர்களுக்கு ஒளி மயமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுத்தது இந்த "மேப்பிள் இலை"யை அடையாளமாகக் கொண்ட மேன்மை மிகு தேசம் கனடா.! புடிப்படையாக தமிழ்க் கனடியர்களின் எண்ணிக்கை இந்த மண்ணில் அதிகரிக்க அதிகரிக்க. இங்கு எமக்காக ஆலயங்கள். விளையாட்டுக் கழகங்கள், கற்ற பாடசாலைகளின் பழைய மாணவ மாணவிகள் சங்கங்கள், வர்த்தக நிறுவனங்கள். தொழில் நிறுவனங்கள் என பல தோன்றின. பொது நிறுவனங்களாகவும் அமைப்புக்களாகவும் விளங்கிய அவற்றின் மூலம் எமது தமிழ்ச் சமூகம் ஒற்றுமையாக பல பொதுப் பணிகளை ஆற்றத் தொடங்கியது.

நாட்கள் நகர்ந்து செல்லச் செல்ல எமது சமூகம் சார்ந்த குடும்பங்கள் விரிவடைந்து எமது எண்ணிக்கை மிகக் குறுகிய காலத்தில் பலமிக்க
ஒரு சமூகமாக அடையாளம் காணப்பெற்றது. எமக்காக ஆரம்பிக்கப்பெற்ற பத்திரிகைகள், வானொலி நிலையங்கள் மற்றும் தொலைகாட்சி நிறுவனங்கள் ஆகியன எமது இனத்தின் "அடையாளங்கள்" என பல்லின கலாச்சார நாடாக விளங்கும் கனடாவில் அரசியல் தலைவர்களால் சுட்டிக்காட்டப்படும் அளவிற்கு மரியாதைக்குரியவையாக விளங்கத் தொடங்கின.
இந்த கால கட்டத்தில் தான் எமது தமிழ்க் கனடியர்கள் நான்கு பக்கங்களிலும் வாழும் ஏனைய இனங்கள் சார்ந்த மக்களையும் அவர்களது வளர்ச்சிகளை கூர்ந்து கவனிக்கத் தொடங்கினார்கள். எமது தமிழச் சமூகம் இங்கு வருவதற்கு முன்னரேயே இந்த மண்ணில் பல காரணங்களுக்காக தங்கள் நாட்டை விட்டு கனடாவில் கால் பதித்த சீனர்கள், பஞ்சாபியர்கள், ஆர்மேனியர்கள், யூதர்கள், இஸ்லாமியர்கள் என பல்லின மக்கள் எவ்வாறு தங்கள் நகர்த்திச் செல்கின்றார்கள் என்று அவதானித்தார்கள். எனவே தமிழர்களான தங்களுக்கென "சமூக மையங்களை" நிறுவி அவை மூலமாக தங்கள் இருப்பையும் இறுக்கத்தையும் மேலும் வலுப்படுத்தி தங்கள் அடையாளத்தை மேலும் பிரகாசமாக்கி அரசியல் தளத்திலும் பிரவேசித்து வெற்றியாளர்களாகத் திகழ வேண்டும் என்ற ஒரு கனவு எமது தமிழ் மக்கள் மத்தியில் சமூக அக்கறை கொண்ட பலருக்குத் தோன்றியது.

எனவே ஆர்வமுள்ளவர்கள் கூடிப் பேசி அதற்கு தேவையான நடவடிக்கைகளை படிப்படியாக செயற்படுத்தத் தொடங்கினார்கள். இவ்வாறான அந்தப் பயணத்தின் போது மறுபக்கத்தில் எமது சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் மத்திய, மாகாண மற்றும் உள்ளாட்சி அரசாங்கங்களில் எமது மொழியைப் பேசும் இளம் தலைவர்கள் உருவாகியிருந்தார்கள். இவ்வாறான காலப்பகுதியில் "பழம் நழுவிப் பாலில் விழுந்தது போன்று எம்மவர்கள் கண்ட கனவான "தமிழ்ச் சமூக மையம்" என்னும் கனவு பலிக்கும் நிலையை எட்டியது போன்ற உணர்வு அனைவர் மத்தியிலும் தோன்றத் தொடங்கியது.
நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று எமது மக்கள் கண்ட "தமிழ்ச் சமூக மையம்" என்னும் கனவு நிதர்சனமாகி நனவாக மாறும் நிலை தோன்றுவதற்குரிய அறிகுறிகள் தென்பட்டன. எமக்கான மையம் எழுந்து நிற்கும் நிலத்தை வழங்க ரொறன்ரோ மாநகர சபையும் மேலும் ஆரம்ப நிதி ஒதுக்கீடுகளாக
கனடாவின் மத்திய அரசு வழங்கிய 13 மில்லியன் நிதியும் நிதியும் ஒன்றாரியோ மாகாண அரசு வழங்கிய 12 மில்லியன் நிதியும் உறுதி செய்யப்படுவதற்கு எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் துணையாக இருக்க எம்மவர்களின் மனங்களில் நம்பிக்கைகள் "துளிர்" விட்டன.
எவ்வாறு இருந்தாலும் எமது தமிழ் மக்களின் பங்களிப்பாக எதிர்பார்க்கப்பட்ட 13 மில்லியன் டாலர்களை திரட்டுவதில் ஈடுபாட்டுடன் செயற்படும் வகையில் பலர் இணைந்து தொழிற்பட்டார்கள். அவர்களில் தொழிலதிபர் சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் அதன் தலைமைத்துவத்தை கைகளில் எடுத்திட அவரது நண்பர்கள் பலர் இணைந்து கொண்டார்கள். இன்னொரு பக்கத்தில் இந்த திட்டத்திற்குத் தேவையான நிர்வாகப் பணிகளைக் கவனிப்பதற்கு கீர்த்தனா மற்றும் நேத்திரா ரொட்றிகோ, சிவா உட்பட பலர் தஙகளை அர்ப்பணிக்க எமது நம்பிக்கையான பயணம் வெளிச்சத்தை நோக்கி நகர்ந்தது. நிதி சேகரிப்பில் இணைந்து கொண்ட "புதிய வெளிச்சம்" நவஜீவன் குழுவினர் தாமாக இரண்டு மில்லியன் டாலர்களை திரட்டும் முயற்சியில் வெற்றி கண்டார்கள். இதனால் எதிர்பார்க்கப்பெற்ற
தொகையிலும் பார்க்க சுமார் இரண்டு மில்லியன் டாலர்கள் தற்போது எமது சமூகத்தின் நன்கொடை நிதி சேகரிப்பில் திரண்டு எம்மை தலை நிமிர வைத்துள்ளது. இந்த திட்டத்தில் பங்களித்த அனைவருக்கும் நாம் தலைசாய்த்து மதிப்பளிக்க வேண்டும்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஆனையிறவுப் பெருஞ்சமர் 2000:

## ஈழத்தமிழரின் போரியல் மேலாதிக்கமும் கரும்புலிகளின் தொழில்நுட்பப் பாய்ச்சலும்

ஈழப்போரின் வரலாற்றில் 2000-ஆம் ஆண்டு நிகழ்ந்த "ஓயாத அலைகள் - 3" சமர், ஒரு விடுதலை அமைப்பு மரபுவழி இராணுவமாக (Conventional Army) முழுமை பெற்றதை உலகிற்கு நிரூபித்த தருணமாகும்.

பல தசாப்தங்களாக இலங்கை இராணுவத்தின் பிடியில் இருந்த, இயற்கையிலேயே பாதுகாப்புக் கோட்டையாக விளங்கிய ஆனையிறவு (Elephant Pass) தளம் வீழ்த்தப்பட்ட விதம், உலக இராணுவ ஆய்வாளர்களை இன்றும் வியப்பில் ஆழ்த்தும் வரலாற்றுப் பாடமாகும்.

### குடாரப்பு தரையிறக்கம்: ஒரு இராணுவ அதிசயம்

ஆனையிறவுத் தளத்தை வீழ்த்துவதற்கான குடாரப்பு தரையிறக்கம், புலிகளின் போரியல் வரலாற்றில் மிகத் துணிச்சலான நகர்வாகும்.

- மறைமுகத் தாக்குதல் வியூகம்: தளத்தின் முன் கதவை உடைக்காமல், கடல் வழியாகப் பின்வாசல் வழியில் நுழைந்து எதிரியை நிலைகுலையச் செய்யும் உத்தி.
- தளபதி பால்ராஜின் தலைமை: 2000 ஏப்ரல் 26 அன்று, கடற்புலிகளின் அதிவேக படகுகள் மூலம் தளபதி பால்ராஜ் தலைமையிலான 1500-க்கும் மேற்பட்ட போராளிகள் குடாரப்பில் தரையிறங்கினர்.
- விநியோகப் பாதை துண்டிப்பு: படையணி யாழ்ப்பாணத்தையும் ஆனையிறவையும் இணைக்கும் ஏ-9 நெடுஞ்சாலை துண்டித்தது. தளத்தை முற்றாக தனிமைப்படுத்தியது.
- தற்காப்புச் சாதனை: பல்லாயிரக்கணக்கான இராணுவம் மற்றும் கடல் என பின்வாங்க வழியில்லாத சூழலிலும் 34 நாட்கள் கடும் சமரை எதிர்கொண்டு வெற்றி பெற்றது.

### கரும்புலிகளின் தொழில்நுட்பப் புரட்சியும் போர்க்களப் பயன்பாடும்

### கடற்கரும்புலிகளின் கடல்சார் தொழில்நுட்பம்

- Stealth (மறைப்புத் தொழில்நுட்பம்): கடல் அலைகளின் நிறத்தோடு ஒத்துப் போகும் கரும்நிறம் பூசப்பட்ட ஃபைபர் கிளாஸ் படகுகள், ரேடார் திரைகளில் இருந்து தப்பி இலக்குகளைத் தாக்கின.
- அதிதிறன் வெடிமருந்துகள்: நூற்றுக்கணக்கான கிலோ C4 மற்றும் TNT வெடிமருந்துகளைச் சுமந்து சென்ற படகுகள், இராணுவத்தின் அதிவேக "டோரா" (Dvora) படகுகளை அழித்தன.

### தரைக்கரும்புலிகளின் தகர்ப்பு கருவிகள்

- தடிகோல்கள் (Bangalore Torpedoes): பல அடுக்கு முட்கம்பி வேலிகளை உடைக்க பயன்படுத்தப்பட்டன. தாக்குதல் படையணி விரைவாக அரண்களுக்குள் நுழைந்தது.
- முதுகுப்பை வெடிகுண்டுகள் (Backpack Bombs): கான்கிரீட் பதுங்கு குழிகள் மற்றும் தகவல் தொடர்பு மையங்களைப் புட்டாக்க வியூகம்.
- கவச எதிர்ப்புத் திறன்: "பப்பல்" (Buffel) போன்ற கவச வாகனங்களை RPG தாக்குதலால் முற்றிலும் தடை செய்தனர்.

### நீர் வழங்கல் துண்டிப்பு: ஒரு "முற்றுகைப் போர்" நுட்பம்

ஆனையிறவுத் தளத்தின் மிகப்பெரிய பலவீனம் அதன் குடிநீர் ஆதாரம்.

- இயக்கச்சி கைப்பற்றல்: நீர் உந்து நிலையத்தை கைப்பற்றியவுடன், தளத்திலிருந்த பல்லாயிரக்கணக்கான வீரர்களுக்குக் குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட்டது.
- உளவியல் வீழ்ச்சி: கடும் வெயில், தாகம் மற்றும் தொடர்ந்த ஊடுருவல் தாக்குதல்கள், இராணுவத்தினரை உளவியல் ரீதியாக பலவீனமடையச் செய்தது.


### களமுனைப் படையணிகளும் தீரமிக்க தளபதிகளும்

தேசியத் தலைவர்களின் நேரடி திட்டமிடலில் களத்தில் பால்ராஜ், சொர்ணம், தீபன், பானு மற்றும் கடற்புலிகளின் தளபதி சூசை ஒருங்கிணைந்து வழிநடத்தினர்.

- சிறப்புப் படையணிகள்: சோதியா மற்றும் மாலதி பெண் போராளிகள் படையணிகள், கிழக்கு மாகாண ஜெயந்தன் படையணி, கவச எதிர்ப்புத் திறன் கொண்ட இம்ரான் பாண்டியன் படையணி.
- வீரச்சாவடைந்த கரும்புலிகள்: லெப். கேணல் தாரணி, மேஜர் கனியமுதன், மேஜர் சுதன், மேஜர் மதியழகன், மேஜர் நரேஸ், மேஜர் சிட்டு, கேணல் புகழேந்தி, லெப். கேணல் ஞானவேல், மேஜர் சுருளி.

### வரலாற்றுப் பரிசுகளும் இராணுவச் சமநிலையும்

- பீரங்கிப் பலம்: கைப்பற்றப்பட்ட 152 மி.மீ மற்றும் 122 மி.மீ பீரங்கிகள், புலிகளின் "கிட்டு பீரங்கிப் படையணி" சர்வதேச தரத்தில் உயர்த்தியது.





- கவசப் படையணி: வு-55 டாங்கிகள் மற்றும் கவச வாகனங்களால் உருவாக்கப்பட்ட படையணி, பின்னர் நடத்திய "அக்கினிக்கேலே" தாக்குதலை முறியடித்தது.
- அரசியல் வெற்றி: சர்வதேச அரங்கில் புலிகளை வலுவான தரப்பாக மாற்றியது. 2002-ம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு (CFA) அடித்தளமாக அமைந்தது.

ஆனையிறவுச் சமர் என்பது அடக்குமுறைக்கு எதிரான அறிவுப்பூர்வமான மற்றும் வீரமிக்க பதிலடி.

தமிழீழத் தேசியக் கொடி மற்றும் தேசிய இலச்சினையில் உள்ள புலிச் சின்னத்தின் வலிமைக்கு, ஆனையிறவு வெற்றி நித்திய சாட்சி.

மாவீரர்களின் உதிரத்தாலும், கரும்புலிகளின் தொழில்நுட்பத் தியாகத்தாலும் எழுதப்பட்ட இந்த வரலாறு, தமிழ்த் தேசிய அடையாளத்தின் அழியாத ஆவணம் ஆகும்.

*- ஈழத்து நிலவன்*



# நல்லூர் தவிசாளருக்கு எதிராக கோப்பாய் பொலிசில் முறைப்பாடு!

திருநெல்வேலி பகுதியில் தனியார் ஒருவரால் மேற்கொள்ளப்படும் விளம்பர சேவையினை முன் அறிவித்தல் இன்றி நிறுத்தியமையால் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளருக்கு எதிராக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் தெரியவருவதாவது, தனியார் ஒருவரால் பல வருடங்களாக நடாத்தப்பட்டு வருகின்ற விளம்பர ஒலிபரப்பு சேவையினை அரசியல் பழிவாங்கல் காரணமாக முன்னறிவித்தல் இன்றி உடனடியாக மூடும்படி சபை தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை அறிந்த நிறுவன உரிமையாளர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை இன்று வியாழக்கிழமை பதிவு செய்துள்ளார்.

# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் 8 தங்க பதக்கங்களை பெற்ற மருத்துவ பீட மாணவி நற்குணம் அபிராமி!



யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா 19ம் திகதி வியாழக்கிழமை அன்று நடைபெற்றபோது மருத்துவ பீடத்தை சேர்ந்த நற்குணம் அபிராமி என்ற மாணவி 8 தங்கப் பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றில் மருத்துவ பீடத்திலிருந்து ஒருவரே எட்டு தங்க பதங்கங்களை பெற்ற இந்த விடயமானது மிகப்பெரிய சாதனையாக பார்க்கப்படுகிறது. குறித்த மாணவிக்கு பல்வேறு தரப்பினரும் பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர்.

கனடா உதயன் ஆசிரிய பீடமும் மருத்துவ கற்கையில் சாதனை படைத்த எதிர்கால மருத்துவ கலாநிதி நற்குணம் அபிராமி அவர்களை வாழ்த்துகின்றது.

HELP WANTED

Workers needed for renovation company. Must have experience in one of the following:

- Drywall Installation
- Hardwood Installation
- Kitchen Reno
- Painting
- Bathroom Reno

Call - Siva 416-706-8160

Sapphire Banquet & Catering

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Birthdays
- Graduation Party
- Bridal Shower
- Engagement
- Wedding Showers

SHIVA SUBRAMANIAM (647) 406-4868

இலங்கை செய்திகள் Sri Lanka News

# பயங்கரவாதம் தொடர்பான எந்தவொரு சட்ட மூலமும் எமது நாட்டுக்கு அவசியமில்லை என்கிறார் ஜெபரட்ணம் அடிகளார்!

பு. கஜிந்தன்



எமது நாட்டுக்கு பழைய பயங்கரவாத தடைச் சட்டமும் தேவையில்லை, அதேபோல புதிதாகக் கொண்டுவரப்பட உள்ள சட்டமும் அவசியமில்லை என யாழ்ப்பாணம் மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

தற்போது நடைமுறையில் உள்ள மற்றும் எதிர்காலத்தில் கொண்டுவர முயற்சிக்கின்ற பயங்கரவாதம் தொடர்பான சட்டமூலத்திற்கு எதிரான கையொப்ப போராட்டத்தில் இன்றையதினம் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எமது நாட்டில் நீண்ட காலமாக நடைமுறையில் இருந்த பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலமாக தமிழ் மக்கள் செல்லொணா துயரங்களை அனுபவித்தார்கள். எத்தனையோ பேரின் வாழ்க்கையில் கவலைகளும், வலிகளும், இழப்புக்களும் ஏற்பட்டன.

ஆகவே இவ்வாறான ஒரு சட்டமூலத்தை நீக்குமாறு நீண்ட காலமாக அரசாங்கங்களை, தமிழ் மக்களாகிய நாங்கள் தொடர்ச்சியாக கேட்டுக் கொண்டிருந்தோம்.

ஆனால் தற்போது அந்த பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குகின்ற பாணியில் புதிய ஒரு சட்டமூலத்தை கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதிய சட்டத்தின் மூலமாகவும் தமிழ் மக்களுக்கு பிரதானமான பாதிப்புகள் ஏற்படும். இதன்மூலம் அவர்களுடைய வாழ்க்கையானது தொடர்ச்சியாக பயத்தின் மத்தியிலேயே தொடரக்கூடிய வாய்ப்பு உள்ளது.

மக்கள் அனைவரும் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும், அமைதியாகவும், பயமில்லாமலும் வாழக்கூடிய நிலைமையை ஏற்படுத்துவதற்கு பழைய பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கிவிட்டு, புதிதாக எந்த சட்டமூலத்தையும் அறிமுகம் செய்ய வேண்டாம் என்ற கோரிக்கையை அரசாங்கத்திடமும், நீதி அமைச்சிடமும் தமிழ் மக்களாகிய நாங்கள் முன்வைக்கின்றோம்.

எமது இந்த கோரிக்கையை அரசாங்கமானது ஏற்று, தமிழ் மக்களுடைய அபிலாசைகளை பூர்த்தி செய்து தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய நிலையை இந்த நாட்டில் ஏற்படுத்த வேண்டும் என்றார்.

# பலாலி விமான நிலையத்திற்கு வடக்கிலிருந்து அதிக பணியாளர்களை நியமிக்க தீர்மானிக்கப்பெற்றுள்ளதாக வடக்கின் ஆளுநர் தெரிவிப்பு!




பலாலி விமான நிலையத்திற்கு வடக்கில் இருந்து அதிக பணியாளர்களை நியமிப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

19ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் பலாலி விமான நிலையத்திற்கு அமைச்சர்கள் குழாமுடன் விஜயம் செய்து, அபிவிருத்தியை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,



எதிர்காலத்தில் பலாலி விமான நிலையத்திற்கு விமான துறை சார்ந்த பணியாளர்களை வடக்கில் இருந்து அதிகளவாக நியமித்தல், விழிப்புணர்வு ஏற்படுத்தல் போன்ற செயற்பாடுகளுக்காக விமானத்துறை அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் வருகை தந்து ஆளுநர் செயலகத்தில் கூட்டம் ஒன்றினையும் நடாத்தி இருந்தனர். அதன் பின்னர் பலாலி சர்வதேச விமான நிலையத்தையும் பார்வையிட்டனர்.

பலாலி விமான நிலையத்தின் விஸ்தரிப்பு மற்றும் வசதிகள் போதாமல் உள்ளமை தொடர்பாக அந்த இடங்களை பார்வையிட்டு, அபிவிருத்திகளை விரைவுபடுத்தல் போன்றன பற்றியும் இங்கே கலந்துரையாடினார்கள்.

சர்வதேச விமான நிலையமாக இருக்கின்ற பலாலி விமான நிலையத்தில் தற்போது அடிப்படை வசதிகள் குறைவாக காணப்படுகின்றன. அதை நிவர்த்தி செய்வதற்கு இரண்டு கட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளன.

ஒரு அபிவிருத்தி ஏற்கனவே ஆரம்பித்த நிலையில் மற்றைய அபிவிருத்தி எதிர்வரும் ஜூன் மாதம் அளவில் ஆரம்பித்து, இந்த விமான நிலையம் அனைத்து வசதிகளும் கொண்ட ஒரு விமான நிலையமாக மாற்றப்படும் என்றார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "மலையகம்" அழைக்கப்பெறும் மலையகத்தவர்களின் தாயகம். எம் தேசிய அடையாளங்களின் இருப்பிடமாகவே தொடர்ந்து திகழ ஒற்றுமையாகத் திரள்வோம்

மலையக முற்போக்கு சக்திகள் விழிப்படைந்து மக்களை அரசியல் மயப்படுத்தி கட்சி அரசியலுக்கு அப்பால் செயல்படுவதற்கு வழி வகுக்காது விடின் மலையகம் சுற்றுலாத்தலமாகவும், அரசாங்கத்துக்கு அந்நிய செலாவணியை ஈட்டிக் கொடுக்கும் தொழிலாளர் வாழும் நிலப் பிரதேசமாக மட்டுமே இருக்கும். "மலையகம்" மலையகத்தவர்களின் தாயகம். அது எம் தேசிய அடையாளங்களின் இருப்பிடம். இனமாக திரட்சி கொள்வோம். இவ்வாறு அருட்தந்தை மாரிமுத்து சத்திவேல் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர்விடுத்துள்ள அறிக்கையில் அவர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் அரசாங்கத்திற்கும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் உள்ளடக்கம் வெளிப்படுத்தப்படாத நிலையில் செய்து கொள்ளப்பட்டது என்பது நாம் அறிந்ததே. இது கட்சி அரசியல் மற்றும் முதலாளித்துவ இலாப நோக்கம் கொண்ட ஒப்பந்தமாகும். பெருந்தோட்ட நிறுவனங்கள் இவ் ஒப்பந்தந்திற்கான நன்றியையும் மகிழ்ச்சியையும் ஜனாதிபதியின் (11.02.2026) மலையக விஜயத்தின்போது வெளிக்காட்டிவிட்டன. அரசாங்கத்தின் நன்றி கடன் இதைவிட அமோகமாக இருக்கும். இது தொடர்பில் மலையக முற்போக்கு சக்திகள் மிகுந்த அவதானத்துடனும் தீர்க்கதரிசனத்துடனும் செயற்படல் வேண்டும்.

ஜனாதிபதி பெருந்தோட்ட தொழிலாளர்களை சந்தித்ததை தற்செயல் நிகழ்வல்ல அது நன்கு திட்டமிட்ட நிகழ்வு என்பதை அன்றைய காட்சிகள் உறுதிப்படுத்துகின்றன. ஜனாதிபதியை தோட்ட அதிகாரிகள் காத்திருந்து வரவேற்றதும் தொழிலாளர்களின் ஆடை அலங்காரம் என்பவற்றோடு ஜனாதிபதிக்கு போர்தப்பட்ட பொன்னாடையும் இதனை வெளிப்படுத்தியிருந்தன.

தொழிலாளர்கள் தமக்கான சம்பளம் அதிகரித்த விடயத்தை மாத்திரம் சுட்டிக்காட்டி ஜனாதிபதி இருநூறு ஆண்டு காலம் வாழ வேண்டும் என வாழ்த்தி மகிழ்ந்ததோடு மண்ணில் கால் பதித்தமைக்கு நன்றியும் கூறினர். இறுதியில் நாங்கள் உங்களோடு இருக்கின்றோம் எனக் கூறியதோடு, மகிழ்ச்சியின் உச்சத்தின் உணர்வில் "நீங்களே கடவுள்" என்றும் கூறினர்.

தொழிலாளர்களுக்கு அதிகரித்து கொடுக்கப்பட்ட ரூபாய் 400 என்பது அரசாங்கமும் பெருந்தோட்ட நிறுவனங்களும் தங்கள் குடும்ப சொத்தில் இருந்து கொடுக்கவில்லை. தொழிலாளர்களின் இரத்த வியர்வை சிந்திய இலாபத்தில் கிள்ளி எடுத்து கொடுக்கும் தொழிலாளர்களின் பணமாகும். அதே பணத்தில் தோட்ட முகாமையாளர்களும், அதிகாரிகளும் பெறும் சம்பளத்தோடும் அனுபவிக்கும் சுகபோக வாழ்வோடும் ஒப்பிடுகையில் சிறு தொகையே அதிகரிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல இன்னும் மூன்று வருடங்களுக்கு சம்பள அதிகரிப்பு தொடர்பில் எந்த சக்தியாலும் வாய் திறக்க முடியாத அளவிலேயே உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது.

அதிலும் வருகைக்காண ஊக்குவிப்பு பெடுப்பனவு மலையகத்தவர்களின் அரசாங்கத்திற்கான ஒத்துழைப்பிலேயே தாங்கியுள்ளது. அரசாங்கம் தமது அரசியல் இலாப நட்ட கணக்கிலேயே அதனை நோக்கும்.

இந்த நிச்சியமற்ற ஊக்குவிப்பு பணத்தினை தேசிய மக்கள் சக்தி மலையக வாக்கு வங்கியில் நிலையான வைப்பாக்கி உள்ளதென்பதை ஜனாதிபதியின் மலையக விஜய நிகழ்வுகள் காட்டுகின்றன. மலைய மண்ணில் பிறந்தவரும், மக்கள் விடுதலை முன்னணியின் நீண்ட கால உறுப்பினரும், தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர், வடக்கில் தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கியை பலப்படுத்த எடுக்கும் முயற்சிக்கும் மத்தியில் ஜனாதிபதி மலையகத்தில் தமது வாக்கு வங்கியை தற்போதைக்கு பலப்படுத்தியுள்ளார் என்றே கூறலாம்.



தொழிலாளர் சமூகம் ஜனாதிபதிக்கு தமது மகிழ்ச்சியை தெரிவிக்கவும் வாழ்த்தவுமே தமது வாய்களை திறந்தனர். மகிழ்ச்சி களிப்பில் ஒளிப்படங்களை எடுத்ததையும் காணக் கூடியதாய் இருந்தது. பெருந்தோட்ட நிறுவனங்களின் கெடுபிடி தொடர்பாகவோ தமது அடிப்படை வாழ்வாதார பிரச்சினை தொடர்பாகவோ எவரும் கதைக்கவில்லை. காணி உரிமை விடயமாக எவரும் எதையும் கேட்கவில்லை. இது தொடர்பில் கதைக்கக் கூடாது. மனு கொடுக்கவும் கூடாது எனும் அழுத்தம் இருந்ததா? அது தொழிலாளர்களுக்ககே வெளிச்சம்.

நாட்டின் வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு இவ்வாறு ஜனாதிபதி செல்லும் போது ஒரு பக்கம் உத்தியோகபூர்வ வரவேற்பு நடந்தாலும் மறுபக்கம் நீதி கோரி மனுக்கள் கொடுப்பதும், வீதி மறியல் போராட்டம் நிகழ்வதும் உண்டு. ஆனால் ஜனாதிபதி மலையக பாதைகளில் செல்லும்போதும் மலையக மண்ணின் மக்களோடு நின்ற போதும் எங்கும் நீதி போராட்டம் நடத்துவதுமில்லை. கோரிக்கை பதாதைகள் தூக்கவும் இல்லை. கோசம் எழுப்பவும் இல்லை. தேயிலை கொழுந்து பறிக்கும் போதும் கவ்வாத்து வெட்டும் போதும் செடிகள் அமைதியாக இருப்பது போல மலையக மக்களும் அமைதியாக நின்றனர்.

மலையகத்தில் போதை ஒழிப்பினை முன்னிலைப்படுத்தியே ஜனாதிபதி சென்றார். மலையகத்தில் போதை ஒழிப்பு முழுமை அடையுமோ இல்லையோ என்று பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். ஆனால் ஜனாதிபதி மலையக மக்களின் மனதில் போதையாகியுள்ளார்.

மலையகத்தின் தொழிற்சங்களினதும் அரசியல் கட்சிகளினதும் தலைவர்கள் மலையக மக்கள் அனுபவிக்கும் பிரச்சினைகள், தேவைகள், உரிமைகள் தொடர்பாக வெளிநாட்டு இராஜதந்திரிகளை, குறிப்பாக இந்திய தூதுவரை, தமிழக முதலமைச்சரை ஏன் ஐ.நா பிரதிநிதிகளை சந்திக்க முயற்சிப்பதை நாம் அறிவோம். ஆனால் மலையகத்திற்கு வந்த ஜனாதிபதியை இவர்கள் சந்தித்ததாக தெரியவில்லை. தமது தொண்டர்களை மனுக்களை கொடுப்பதற்கு உற்சாகப்படுத்தவுமில்லை. இது ஏன்? அரசாங்கத்திற்கு மலையக அரசியல் தலைமைகளுக்கும் இடையில் அரசியல் புரிந்துணர்வு "டீல்" எதுவும் உள்ளதா? இதுவே மக்கள் கேள்வி.

ஜனாதிபதியின் மலையக விஜயத்தின் போது உற்சாக எழுச்சியைத் தவிர அரசியல் எழுச்சியை காண முடியவில்லை. இதற்கு தொழிற்சங்கங்களும், அரசியல் கட்சிகளின் தலைமைகளுமே பொறுப்பேற்க வேண்டும். மக்களுக்கு அரசியல் விழிப்பு ஏற்படுத்தாது அவர்களை அரசியல் மயப்படுத்தாது அரசியல் அமைப்புபடுத்தாது கட்சி அரசியலுக்குள் மட்டும் கட்டுப்படுத்தி தமது சுயநல அரசியலை முன்னெடுப்பது இதற்கு காரணம் ஆகும். இந்நிலை நீடிக்க கூடாது.

மலையக முற்போக்கு சக்திகள் விழிப்படைந்து மக்களை அரசியல் மயப்படுத்தி கட்சி அரசியலுக்கு அப்பால் செயல்படுவதற்கு வழி வகுக்காது விடின் மலையகம் சுற்றுலாத்தலமாகவும், அரசாங்கத்துக்கு அந்நிய செலாவணியை ஈட்டிக் கொடுக்கும் தொழிலாளர் வாழும் நிலப் பிரதேசமாக மட்டுமே இருக்கும். "மலையகம்" மலையகத்தவர்களின் தாயகம். அது எம் தேசிய அடையாளங்களின் இருப்பிடம். இனமாக திரட்சி கொள்வோம்.

***அருட்தந்தை மாரிமுத்து சத்திவேல்***


கனடா இந்து மாமன்றம்
CANADA HINDU MAAMANTRAM

கனடா இந்து மாமன்றம் சுவையுடன் படைத்திடும்
**சர்க்கரைப் பொங்கல் விழா - 2026**
**சமய அறிவு, பேச்சு, பண்ணிசைப் போட்டிகள்**

இடம்: **SRI SATHYA SAI BABA CENTRE OF SCARBOROUGH**
**5321 Finch Ave East, Scarborough ON. M1S 5W2**
காலம்: **March 28, 2026 (Saturday) 9.00 AM**

**போட்டிகளுக்கு உரிய பிரிவுகள்:**

மழலைகள் (JK) : 01-01-2021 இற்குப் பின் பிறந்தோர்
ஆரம்பப் பிரிவு (SK) : 2020 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 1 (Gr.1) : 2019 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 2 (Gr.2) : 2018 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 3 (Gr.3) : 2017 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 4 (Gr.4) : 2016 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 5 (Gr.5) : 2015 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 6 (Gr.6) : 2014 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 7 (Gr.7) : 2013 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 8 (Gr.8) : 2012 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பும் பிறந்தோர்

❋ மாற்றுத் திறன் மாணவர்களுக்கான சிறப்புப் போட்டிகள் தனிப்பிரிவாக நடாத்தப்படும்.

குறிப்பு:

1. சமய அறிவுப் போட்டிகள் பிரிவு 4ம் அதற்கு மேல் உள்ள பிரிவுகளுக்கு மட்டும் இடம்பெறும். கீழ்ப் பிரிவு மாணவர்கள் விரும்பினால் 4வது பிரிவில் பங்குபற்றலாம்.
2. புதிய பாடத்திட்டத்தின்படி போட்டிகள் இடம்பெறும். விபரங்களை, தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
3. போட்டியாளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைப் போட்டியின்போது கொண்டுவரல் வேண்டும்.
4. மேற்கண்ட போட்டிகளில் பங்குபற்ற குடும்பத்தில் முதல் போட்டியாளருக்கு $10.00, அடுத்து வருவோர்க்கு தலா $5.00 வீதம் அறவிடப்படும்.
5. **மே 2, 2026**ல் நடைபெறும் சர்க்கரைப் பொங்கல் விழாவில் போட்டிகளில் பங்கு பற்றிய மாணர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கப்படும்.

**மார்ச்சு 10, 2026க்கு முன் தரவேண்டிய தகவல்கள்:**

முதல் பெயர்: ..........
குடும்பப் பெயர்: ..........
பிரிவு: ..........
பிறந்த திகதி: ..........
தொலைபேசி ..........
email: ..........
பங்குகொள்ளும் போட்டிகள்:
☐ பேச்சு ☐ பண்ணிசை ☐ சமய அறிவுப் போட்டி

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
Secretary,
Canada Hindu Maamantram,
39, Longbow Sq, Scarborough, ON. M1W 2W6
email: canhinduma@gmail.com

மேலதிக தொடர்புகளுக்கு: 416.497.4741
647.620.5171, 905.785.6526
416.356.7323, 647.992.0587

**விண்ணப்ப முடிவு திகதி: மார்ச்சு 10, 2026**

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# வாகனம் செலுத்தும் போது கைப்பேசியைப் பயன்படுத்திய இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலை சாரதி ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

## வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் எஸ்.விமலேஸ்வரன் அறிவிப்பு

- எஸ்.ஆர்.லெம்பேட் (17-02-2026)



பயணிகள் போக்குவரத்து சேவை விதிமுறைகளை மீறி, வாகனம் செலுத்தும் போது கைப்பேசியைப் பயன்படுத்திய இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலை சாரதி ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகளில் ஈடுபடும் சாரதிகள் தொடர்பில் பொதுமக்கள் 0719090900 என்ற இலக்கத்திற்கு ஆதாரங்களுடன் முறைப்பாடு செய்யலாம் என வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் எஸ்.விமலேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலையைச் சேர்ந்த சாரதி ஒருவர், பேருந்தை செலுத்திக் கொண்டிருக்கும் போது கைப்பேசியைப் பயன்படுத்தியமை தொடர்பில் எமக்கு ஆதாரத்துடன் முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

பயணிகளின் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கும் இச் செயற்பாடு தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய முகாமையாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

அதற்கமைய, சம்பந்தப்பட்ட சாரதிக்கு 3 நாட்கள் கட்டாய "மீட்டல் பயிற்சி" வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக எனக்கு அறிக்கை இடப்பட்டுள்ளது.

தனியார் பேருந்து அல்லது அரச பேரூந்து களாக இருப்பினும், பயணிகள் போக்குவரத்து சேவை விதிமுறைகளை மீறி செயல்படும் சாரதிகள் தொடர்பில் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

சாரதிகள் வாகனம் செலுத்தும் போது கைப்பேசி பேசுதல், அதிவேகமாகச் செலுத்துதல் அல்லது கவனயீனமாக செயற்படுதல் போன்ற விதிமீறல்களில் ஈடுபட்டால், அதனை ஒளிப்படம் அல்லது காணொளியாக எடுத்து 0719090900 என்ற இலக்கத்திற்கு வாட்ஸ்அப் ஊடாக ஆதாரங்களுடன் அனுப்பி வைக்க முடியும்.

அவ்வாறு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் மீது எவ்வித பாரபட்சமும் இன்றித் துரித நடவடிக்கை எடுக்கப்படும்.என குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொழும்பு ஜிந்துப்பிட்டியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மன்னார் – முசலி பண்டாரவெளி வெள்ளிமலையைச் சேர்ந்த இளைஞர் உயிரிழப்பு



(15-02-2026)

கொழும்பு ஜிந்துபிட்டி பகுதியில் 14ம் திகதி சனிக்கிழ இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஐவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்த இளைஞர் மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பண்டாரவெளி வெள்ளிமலை பகுதியை சேர்ந்த முஜாஹித் முஹம்மது சஹ்ரின் (வயது-20) என தெரிய வந்துள்ளது.

குறித்த இளைஞர் கொழும்பில் தொழில் செய்து வருவதாகவும், சம்பவ தினம் சிகை அலங்கரிப்பு (தலை முடி வெட்ட) சென்ற நிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது. அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரி ஒருவர் சிகை அலங்கார நிலையம் ஒன்றுக்குள் நுழைந்து அங்கிருந்த பலர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பொலிசார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் ஐவர் காயமடைந்து சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார். சம்பவத்தில் 20 வயதான மன்னார் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பண்டாரவெளி வெள்ளிமலை பகுதியை சேர்ந்த இளைஞர் உயிரிழந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.


Thana Insurance Inc

T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road ,
unit D218,
Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

## ‘‘We are living through a hinge moment for Canada’s economy and our place in the world”

### Canada's Minister of Energy and Natural Resources, Hon Tim Hodgson

# கனடா, இந்தியா, நமது பொருளாதாரத்திற்கான ஒரு முக்கிய தருணம் எரிசக்தி மற்றும் இயற்கை வள அமைச்சர் ரிம் ஹொட்க்சன் தெரிவிப்பு



கனடாவின் பொருளாதாரம் மற்றும் உலகில் எமது தேசத்தின் இடம் குறித்த ஒரு முக்கிய தருணத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

எமது பிரதமர் அண்மையில் ல் டாவோஸில் கூறியது போல், இது ஒரு முறிவு மட்டுமே!, மாற்றம் அல்ல. உலகளாவிய வர்த்தகம், பன்முகத்தன்மை, எரிசக்தி பாதுகாப்பு மற்றும் பொருளாதார கூட்டாண்மைகள் பற்றிய நீண்டகால அனுமானங்கள் இனி நிலைத்திருக்கப்போவதில்லை.

பழைய ஒழுங்கு மீண்டும் வரப்போவதில்லை, மேலும் ஏக்கம் ஒரு உத்தி அல்ல. எனவே கனடா எதிர்கொள்ளும் கேள்வி நேரடியானது: நாம் எவ்வாறு பதிலளிப்பது? என்பது மிகவும் முக்கியமானது எனது அண்மைய இந்தியா பயணம் எங்கள் பதிலின் ஒரு பகுதியாக இருந்தது.

இவ்வாறு கனடாவின் எரிசக்தி மற்றும் இயற்கை வள அமைச்சர் ரிம் ஹொட்க்சன் தெரிவித்துள்ளார். கனடாவின் பல்லின ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேற்படி விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அமைச்சர் அவர்கள் அண்மையில் இந்தியாவிற்கு விஜயம் செய்து அங்கு பல அமைச்சர்களையும் அதிகாரிகளையும் சந்தித்து வந்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அந்த செய்திக்குறிப்பில் பின்வரும் முக்கிய குறிப்புக்கள் அடங்குகின்றன.

இந்த மாத ஆரம்பத்தில், கோவாவில் நடந்த இந்தியா எரிசக்தி வாரத்தில் கனடாவைப் பிரதிநிதித்துவப்படுத்தினேன், மேலும் கனடா-இந்தியா உறவுகளை மீட்டெடுப்பதிலும் வலுப்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கும் வர்த்தக வாய்ப்புகள் குறித்து விவாதிக்க புதுதில்லியில் இந்திய அமைச்சர்கள், தொழில் தலைவர்கள் மற்றும் உலகளாவிய எரிசக்தி பங்காளர்களைச் சந்தித்தேன் இவ்வாறான ஒரு நிகழ்வில் கனடிய மத்திய அமைச்சர் ஒருவர் கலந்து கொண்டது இதுவே முதல் முறை - அது முக்கியமானது. இந்த நூற்றாண்டின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதாரங்களில் ஒன்றான கனடா எவ்வாறு ஈடுபடுகிறது என்பதில் இது ஒரு தெளிவான மாற்றத்தைக் குறிக்கிறது.

கனடியர்களுக்கு - குறிப்பாக இந்தியாவுடன் ஆழமான உறவுகளைக் கொண்ட மார்க்கம்-தோர்ன்ஹில்லில் உள்ள பல குடும்பங்களுக்கு - இந்த வருகை மிகவும் முக்கியமானது. மாறிவரும் உலகில் பன்முகத்தன்மை, மீள்தன்மை மற்றும் நீண்டகால செழிப்பைக் கட்டியெழுப்புவதில் கனடாவின் உறுதிப்பாட்டை இது பிரதிபலிக்கிறது.

இந்தியா ஏற்கனவே கிரகத்தில் வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதாரமாகும். சீனா மற்றும் தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்ததற்குச் சமமாக, வேகமாக வளர்ந்து வரும் எரிசக்தி தேவையைக் கொண்ட நாடாகவும் இது உள்ளது. 2040 வாக்கில், இந்தியாவின் எரிசக்தி நுகர்வு இரட்டிப்பாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது மிகவும் தெளிவாக உள்ளது: கனடா ஒரு எரிசக்தி வல்லரசாக இருப்பதில் தீவிரமாக இருந்தால், நாம் இந்தியாவைப் பற்றி தீவிரமாக இருக்க வேண்டும்.

இன்று, கனடா மற்றும் இந்தியாவின் இருவழி வர்த்தகம் ஆண்டுதோறும் $23 பில்லியனைத் தாண்டியுள்ளது மற்றும் இரு நாடுகளிலும் லட்சக்கணக்கான வேலைகளை ஆதரிக்கிறது. நமது இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான மக்கள்-மக்கள் உறவுகளால் இது ஆதரிக்கப்படுகிறது. ஆனால் சாத்தியமானவற்றின் உச்சவரம்புக்கு அருகில் நாம் எங்கும் இல்லை. அதனால்தான், பிரதமர் கார்னியின் கீழ், விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தம் அல்லது CEPA தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்கியுள்ளோம், இது 2030 ஆம் ஆண்டுக்குள் இருதரப்பு வர்த்தகத்தை இரட்டிப்பாக்கி $70 பில்லியனாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எரிசக்தி, முக்கியமான கனிமங்கள், சுத்தமான தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் மேம்பட்ட உற்பத்தி ஆகியவை அந்த ஒப்பந்தத்தின் மையமாக இருக்கும், மேலும் கனடா-இந்தியா வர்த்தகம் மற்றும் முதலீட்டை வளர்ப்பதும் இதில் அடங்கும்.

எனது இந்திய பயணத்தின் போது எனது நோக்கம் எளிமையானது: கனடாவின் போட்டி நன்மைகளை எதிர்கால வர்த்தக வாய்ப்புகளாக மாற்றுதல்.

கோவாவில், இந்தியாவின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் ஹர்தீப் சிங் பூரியை நான் சந்தித்தேன், அங்கு நாங்கள் கனடா-இந்தியா மந்திரி எரிசக்தி உரையாடலை அதிகாரப்பூர்வமாக மீண்டும் நிறுவினோம். இந்தப் புதுப்பிக்கப்பட்ட உரையாடல், சுத்தமான மற்றும் வழக்கமான கனேடிய எரிசக்தியை - கனடா உலகத் தரம் வாய்ந்த தயாரிப்புகளை விற்பனை செய்யும் மற்றும் இந்தியாவுக்கு மிகப்பெரிய தேவை உள்ள பகுதிகளை - இந்தியாவிற்குக் கொண்டுவருவதில் கவனம் செலுத்தும் ஒரு நிலையான அரசாங்க-அரசாங்க தளத்தை உருவாக்குகிறது.

அமைச்சர்கள் உரையாடலை மீண்டும் தொடங்குவது அரசாங்க-பேச்சு போல் தோன்றலாம். ஆனால் இது முக்கியமானது, ஏனெனில் இந்தியாவின் எரிசக்தித் துறை பெரும்பாலும் அரசால் இயக்கப்படுகிறது. தெளிவான கொள்கை சீரமைப்பும், அமைச்சர் பூரி கனடாவை ஆதரிப்பதும், கனடா வணிகத்திற்குத் திறந்திருக்கிறது என்பதையும், தேசிய தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அவர்கள் அளவிடும்போது அவர்கள் எதிர்பார்க்க வேண்டிய முன்னுரிமை சந்தையையும் இந்திய வாங்குபவர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் ஒரு சக்திவாய்ந்த சமிக்ஞையை அனுப்புகிறது.

LNG-யில் மட்டும், இந்தியா தனது எரிசக்தி கலவையில் இயற்கை எரிவாயுவின் பங்கை 2030 ஆம் ஆண்டுக்குள் 15 சதவீதமாக அதிகரிக்க இலக்கு வைத்துள்ளது, இது இன்று தோராயமாக ஆறு சதவீதமாக உள்ளது. கடந்த ஜூன் மாதம் தொடங்கி, கனடா நமது மேற்கு கடற்கரையிலிருந்து LNG-யை அனுப்பத் தொடங்கியுள்ளது, எனவே நம்பகமான, பொறுப்புடன் உற்பத்தி செய்யப்படும் LNG-யுடன் அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய உதவ நாங்கள் நல்ல நிலையில் இருக்கிறோம், உலகளாவிய உமிழ்வைக் குறைக்கும் அதே வேளையில் இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பை ஆதரிக்கிறோம்.

எண்ணெய் மற்றும் எரிவாயுவுக்கு அப்பால், புதுதில்லியில் இருந்தபோது, இந்தியாவின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, கனரக தொழில்கள் மற்றும் இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சர்களைச் சந்தித்தேன். எங்கள் விவாதங்கள் சுத்தமான மின்சாரப் பயன்பாடு, தொழில்துறை கார்பனைசேஷன், உர விநியோகச் சங்கிலிகள், முக்கியமான கனிமங்கள், மின்சார வாகனங்கள் மற்றும் மேம்பட்ட உற்பத்தி ஆகியவற்றை உள்ளடக்கியது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், செய்தி தெளிவாக இருந்தது: கனடா இந்தியாவுக்குத் தேவையானதைக் கொண்டுள்ளது, மேலும் கனேடிய நிறுவனங்களுக்கு குறிப்பிடத்தக்க வாய்ப்புகளை வழங்கும் சந்தையை இந்தியா வழங்குகிறது.

முக்கியமான கனிமங்களில், நாங்கள் உறுதியான முன்னேற்றம் அடைந்துள்ளோம். லித்தியம், தாமிரம் மற்றும் கோபால்ட் போன்ற உள்ளீடுகளைப் பெறுவதற்காக இந்தியா சமீபத்தில் $4 பில்லியன் மதிப்புள்ள தேசிய முக்கியமான கனிமங்கள் திட்டத்தைத் தொடங்கியது - கனடா உலகின் மிக உயர்ந்த சுற்றுச்சூழல் மற்றும் தொழிலாளர் தரநிலைகளில் சிலவற்றை உற்பத்தி செய்யும் கனிமங்கள். வரும் வாரங்களில் எங்கள் இரு நாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பை முறைப்படுத்த நாங்கள் ஒப்புக்கொண்டோம், மேலும் இந்த மார்ச் மாதம் டொராண்டோவில் நடைபெறும் PDAC சுரங்க மாநாட்டில் கலந்து கொள்ள இந்தியாவின் சுரங்க அமைச்சரை அழைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இறுதியாக, இந்தப் பயணம் கனடாவின் உலகளாவிய ஈடுபாட்டிற்கான புதிய, நடைமுறை அணுகுமுறையை பிரதிபலிக்கிறது: வெளிநாடுகளில் பன்முகப்படுத்தும்போது உள்நாட்டில் வலிமையைக் கட்டியெழுப்புதல், எனவே நாங்கள் மீண்டும் எந்த ஒரு சந்தையையும் சார்ந்திருக்க மாட்டோம்.

கனடா ஒரு நிலையான ஜனநாயகம், நம்பகமான ஏற்றுமதியாளர் மற்றும் அதிகரித்து வரும் நிலையற்ற உலகளாவிய பொருளாதாரத்தில் நம்பகமான நீண்டகால பங்காளி. எங்களிடம் குறைந்த விலை, குறைந்த கார்பன் ஆற்றல் உள்ளது. முக்கியமான கனிமங்களை நாங்கள் பொறுப்புடன் பெற்றுள்ளோம். மேலும் எங்கள் பசிபிக் நுழைவாயில் இப்போது முழுமையாகத் திறக்கப்பட்டுள்ளதால், வளர்ந்து வரும் ஆசிய சந்தைகளுக்கு சேவை செய்ய நாங்கள் நல்ல நிலையில் உள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார் அமைச்சர் அவர்கள்.

---

We are living through a hinge moment for Canada’s economy and our place in the world.

We are living through a hinge moment for Canada’s economy and our place in the world.

As the Prime Minister said recently in Davos, this is a rupture, not a transition. Long-standing assumptions about global trade, multilateralism, energy security, and economic partnerships no longer hold.

The old order is not coming back, and nostalgia is not a strategy. So the question facing Canada is straightforward: how do we respond?

My recent trip to India was part of our answer.

Earlier this month, I represented Canada at India Energy Week in Goa and met with Indian ministers, industry leaders, and global energy partners in New Delhi to discuss trade opportunities that will play a key role in the reset and strengthening of Canada-India relations.

This was the first time a Canadian federal minister has attended India Energy Week — and that matters. It signals a clear shift in how Canada is engaging with one of the most consequential economies of this century.

For Canadians — and especially for the many families in Markham–Thornhill with deep ties to India — this visit was critical. It reflects Canada’s commitment to diversification, to resilience, and to building long-term prosperity in a changing world.

India is already the fastest-growing major economy on the planet. It is also the country with the fastest-growing energy demand, roughly equal to China and Southeast Asia combined. By 2040, India’s energy consumption is expected to more than double. It is pretty clear: if Canada is serious about being an energy superpower, we have to be serious about India.

Today, Canada and India’s two-way trade exceeds $23 billion annually and supports hundreds of thousands of jobs in both countries. It is supported by the close people-to-people ties between our two nations. But we are nowhere near the ceiling of what is possible. That is why under Prime Minister Carney, we have restarted negotiations on a Comprehensive Economic Partnership Agreement, or CEPA, which is expected to more than double bilateral trade to $70 billion by 2030. Energy, critical minerals, clean technology, agriculture, and advanced manufacturing will all be central to that agreement, and growing Canada-India trade and investment.






(தொடர்ச்சி 21 பக்கம்)

# கனேடிய பிரதமர் மார்க் கார்னி மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இடையிலான பொருளாதார சூழல்!

## மார்க் கார்னியின் புதிய நியமனமும் கனடாவில் நிகழும் பொருளாதாரத் தாக்கமும்



கனடாவில் பிப்ரவரி மாதம் 16 ஆம் தேதியன்று 'Family Day' எனக் கூறப்படும் குடும்ப தினம் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது. அந்த நாளில், கனடிய பிரதமர் அலுவலகம் முக்கிய அறிவிப்பை வெளியிட்டது. அமெரிக்கா மற்றும் கனடா இடையிலான வர்த்தக, பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்த பிரதமர் மார்க் கார்னி ஒரு புதிய பொருளாதார ஆலோசகராக ஜனிஸ் சாரிட்டியை (Janice Charette) நியமித்துள்ளதாகத் தெரிவித்தனர். அவர் அமெரிக்காவில் பொருளாதார உடன்படிக்கை பேச்சு வார்த்தைகளுக்கு பிரதம அதிகாரியாகவும், கனடா-அமெரிக்கா வர்த்தக அமைச்சரின் ஆலோசகராகவும் பணிபுரியவுள்ளார்.

அந்த வகைளில் கனடா, தற்பொழுது





பொருளாதார மற்றும் பாதுகாப்பு முன்னெடுப்புகளில் பல்வேறு சர்வதேச உடன்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

மார்க் கார்னி அவர்கள் சீனா, ஐக்கிய அரபு அமீரகம் போன்ற நாடுகளோடு பொருளாதார ஒப்பந்தங்களை கைச்சாத்திரப்படுத்தி, பாதுகாப்பு மற்றும் ராணுவ நவீனமயப்படுத்தலை முன்னெடுத்து வருகின்றனர்.

யூரோப்பியன் யூனியனுடன் பல பாதுகாப்பு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கனடாவின் பாதுகாப்பு துறை பலப்படுத்தப்படும். இதன் மூலம் ஆயுதக் கொள்கைகள், ராணுவ உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

பொருளாதார ரீதியாக, கனடா இன்னும் சில சவால்களை எதிர்கொண்டு வருகிறது.

பணவீக்கம் 2.4% ஆக கடந்த ஆண்டு அதிகரித்து தற்போது 2.3% ஆக ஒரு 0.1% குறைப்பை காட்டியிருந்தாலும் எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கு உறுதியான நிலையை ஏற்படுத்த பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமெரிக்காவுடனான வரி, வர்த்தக மற்றும் ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் வழியாக கனடாவின் பொருளாதார வளர்ச்சி மற்றும் முதலீட்டு நிலை பாதிக்கப்படாமல் இருக்கவும் புதிய திட்டங்களை உருவாக்கவும் முயற்சிகள் நடத்தப்படுகின்றன.

முந்தைய காலங்களில் அமெரிக்கா மற்றும் கனடா இடையிலான வர்த்தக உறவுகள் சில தடைகள், வரிப்போர்கள் மற்றும் வரிச்சுமைகள் காரணமாக சிக்கலாக இருந்தது. இதனால் கனடாவின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டதாக வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்த புதிய நியமனத்தினால், வர்த்தக பேச்சுவார்த்தைகள் எளிதாக கையாளப்பட்டு முதலீடுகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் அலுவலக ஊடகங்களின் முன்னிலை அறிவிப்புகளின் படி, புதிய ஆலோசகர் நியமனம் கனடா மற்றும் அமெரிக்கா இடையிலான வர்த்தக உறவுகளை உறுதி செய்யும் ஒரு முக்கிய நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

ஏற்கனவே மார்க் கார்னி வாஷிங்டனுக்கு சென்று அமெரிக்க அதிபர் டொலால்ட் ரம்புடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருந்தார். ஆனாலும் இன்னும் அவை பயனளிக்கவில்லை. பின்னர், சீனாவுடனும் சில பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒப்பந்தங்களில் ஈடுபட்டார். குறிப்பாக, சீனாவின் எலக்ட்ரிக் வாகன தொழில்துறையைப் பற்றிய ஒப்பந்தங்கள் மற்றும் சில வர்த்தக விதிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த பின்னணியில், சீனாவிடனான கனடாவின் ஒப்பந்தம் டொனால்ட் ரம்பை இன்னும் ஆவேசப்படுத்தியது. இந்த நிலையில் அமெரிக்காவோடு கனடாவை வர்த்தகச் சூழலில் நீடித்து நிலைத்த மற்றும் சுமூகமான முறையில் கையாள்வதற்காக, ஜனிஸ் சாரிட்டி என்ற பொருளாதார வல்லுனரை பிரதமர் மார்க் கார்னி நியமித்து, கனடா-அமெரிக்கா இடையிலான வர்த்தக, முதலீட்டு வரித்தொடர்பான அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைப்பார் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நியமனம் மூலம் ஜனிஸ் சாரிட்டி நேரடியாக உயர் மட்டத்திலுள்ள அமெரிக்க மற்றும் கனடா அதிகாரிகளுடன் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்துவார். இதன் விளைவாக, கசந்து போன அமெரிக்க கனடா உறவுகள் சீர்செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க வரி விதிப்புகளை சரிசெய்து, பொருளாதார வளங்களை மேம்படுத்தும் வாய்ப்பு ஏற்படும் என நம்பப்படுகிறது. வரும் காலங்களில் பேச்சுக்கள் வெற்றிபெற்றால் ஏலவே சில மூடப்பட்ட நிறுவனங்கள் மீண்டும் செயல்படக்கூடும், புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும், சில பொருட்கள் மற்றும் சேவைகள் விலைகளில் குறைவுகள் வரும் மற்றும் பொதுவாக வாழ்க்கைச் சுமை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த பொருளாதார இறுக்கங்கள் கனடாவுக்கு மட்டுமின்றி, உலகின் பிற நாடுகளுக்கும் குறிப்பாக அமெரிக்காவுக்கும் பலத்த தாக்கங்களை ஏற்படுத்தியே உள்ளது.

கனடாவில் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் வாழ்கைச் சுமை குறித்து பொதுமக்கள் கூறும் கருத்துகள் கவனத்திற்குரியவை. சில குடும்பங்கள் கடந்த காலங்களில் எளிதில் வாழ்ந்திருந்தாலும், இன்றைய நிலைமை பணவீக்கம், வாழ்க்கை செலவுகள் மற்றும் வாழ்கைச் சுமை காரணமாக சிரமப்படுவதாக தெரிவிக்கிறார்கள்.

இந்நிலையில் கனடா பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மையோடு மேல்வளர்வது அவசியமாகிறது.

கனடா முழுவதும் இன்னும் நிலைத்த, நிலையான பொருளாதார நிலைக்கு வந்து சேரவில்லை. பொதுமக்கள் எதிர்காலத்தில் கனடா மீண்டும் ஒரு உறுதிப்படுத்தப்பட்ட, சிரமமின்றி வாழக்கூடிய நாடாக மாறுமா எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

இந்த நியமனத்தின் பின் நிகழும் விளைவுகளை பற்றி பின்னர் அலசுவோம்.

**கு.மதுசுதன்**
**B.Sc(Hons), M.Sc**
**அரசியல் ஆய்வாளர்**





# "எகிய ராஜ்ய"வும் சுமந்திரனுக்கு அதில் உள்ள "ஆர்வமும்"

**எகிய ராஜ்ஜிய என்ற வரைபை அப்போதிருந்த அரசாங்கத்தோடு சேர்ந்து தயாரித்தது தமிழரசுக் கட்சியும் ஏனைய கட்சிகளும் ஆகும். ஏனைய கட்சிகளுக்குள் ஜேவிபியும் அடங்கும். எனவே இந்த விடயத்தில் அந்த இடைக்கால வரைபு தமிழரசுக் கட்சியின் குழந்தையுந்தான். ஜேவிபியின் குழந்தையுந்தான். அதனால் அந்த வரைபை தமிழரசுக் கட்சியும் ஜேவிபியும் அதாவது அரசாங்கமும் இணைந்து முன்னெடுக்கும் ஆபத்துக்கள் இருப்பதாக கஜேந்திரக்குமார் சந்தேகிக்கிறார்.**



---------------------- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

கடந்த 19ஆம் திகதி அதாவது நேற்றைக்கு முதல்நாள் கொழும்பில் உள்ள சுவிற்சலாந்து தூதரகத்தின் ஏற்பாட்டில் நடக்கவிருந்த சந்திப்பு பின்னர் நிறுத்தி வைக்கப்பட்டு விட்டது. தமிழரசுக் கட்சி அந்தச் சந்திப்பில் கலந்து கொள்வதற்கு ஆர்வமாக இருக்கவில்லை. தமிழ் மக்களுக்கு என்ன வேண்டும் என்பதனை தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒரே குரலில் முன்வைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு சந்திப்பு அது. அதற்கான அழைப்பை முன் வைத்ததும் தமிழ்க் கட்சிகள்தான் என்று சுவிற்சர்லாந்து தூ தரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனினும் கட்சிகளுக்கு இடையில் உள்ள முரண்பாடு அந்தச் சந்திப்பை தமிழரசுக் கட்சி தவிர்த்தமைக்கு காரணம் என்று ஊகிக்கப்படுகிறது.

அண்மை மாதங்களாக அரசாங்கம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்று ஒரு புதிய யாப்புருவாக்க முயற்சியைத் தொடங்கலாம் என்று கஜேந்திரக்குமார் எச்சரித்து வருகிறார். அரசாங்கத்தின் தேர்தல் வாக்குறுதிகளில் அவ்வாறு உண்டு. ரணில்-மைத்திரி அரசாங்கத்தின் காலத்தில் தயாரிக்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்ட இடைக்கால வரைபை அடுத்தடுத்த கட்டங்களுக்கு வளர்த்து செல்ல அரசாங்கம் முயற்சிக்கலாம் என்றும் கஜேந்திரகுமார் எச்சரிக்கின்றார். சில மாதங்களுக்கு முன்பு சுவிட்சர்லாந்தில் நடந்த ஒரு சந்திப்பில் அரசாங்கத்தின் பிரதிநிதியாக வந்திருந்தவர் அவ்வாறு எகிய ராஜ்ஜிய என்று அழைக்கப்படும் அந்த இடைக்கால வரைபை அடுத்த கட்டத்திற்கு முன்னெடுக்கவிருப்பதாகத் தெரிவித்ததை கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டுகிறார்.

இந்த அரசாங்கத்திடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருப்பதனால் புதிய யாப்புருவாக்க முயற்சி ஒன்றில் இந்த அரசாங்கம் ஈடுபடத் தேவையான பலம் அதற்கு உண்டு என்றும் அவர் நம்புகிறார்.

எகிய ராஜ்ஜிய என்ற வரைபை அப்போதிருந்த அரசாங்கத்தோடு சேர்ந்து தயாரித்தது தமிழரசுக் கட்சியும் ஏனைய கட்சிகளும் ஆகும். ஏனைய கட்சிகளுக்குள் ஜேவிபியும் அடங்கும். எனவே இந்த விடயத்தில் அந்த இடைக்கால வரைபு தமிழரசுக் கட்சியின் குழந்தையுந்தான். ஜேவிபியின் குழந்தையுந்தான். அனால் அந்த வரைபை தமிழரசுக் கட்சியும் ஜேவிபியும் அதாவது அரசாங்கமும் இணைந்து முன்னெடுக்கும் ஆபத்துக்கள் இருப்பதாக கஜேந்திரக்குமார் சந்தேகிக்கிறார்.

பல வாரங்களுக்கு முன்பு அரசாங்கத்துக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் நடந்த ஒரு சந்திப்பின் பின் சுமந்திரன் தன்னுடைய எக்ஸ் தளத்தில் என்ன பதிந்தார் என்பதையும் கஜன் சுட்டிக்காட்டுகிறார். அந்தப் பதிவில் சுமந்திரன் எகிய ராஜ்ஜிய குறித்து ஆர்வமாக இருப்பது தெரிகிறது.

இத்தகையதோர் பின்னணியில்தான் கஜேந்திரகுமார் எகிய ராஜ்ஜியவுக்கு எதிராக முன்வைக்கும் விமர்சனங்கள் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணிக்கும் எதிரானவைதான் என்று தமிழரசுக் கட்சி நம்புகின்றது. தமிழரசுக் கட்சியை தமிழ் மக்கள் மத்தியில் மதிப்பிறக்கம் செய்யும் உள்நோக்கம் அங்கே உண்டு என்றும் அவர்கள் சந்தேகிக்கிறார்கள்.

இந்த முரண்பாடுகள், சந்தேகங்கள் என்பவற்றின் விளைவாகவே கடந்த 19ஆம் திகதி சுவிஸ் தூதரகத்தின் ஏற்பாட்டில் ஒழுங்குசெய்யப்பட்ட அந்தச் சந்திப்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஒரு வெளிநாட்டுத் தூதரகத்தின் அனுசரணையோடு தமிழ்க் கட்சிகளை ஒரே மேசையில் இருத்துவதற்கு எடுக்கப்பட்ட ஆகபிந்திய முயற்சி அது. அந்த முயற்சி குழப்பப்பட்டமையானது இனப்பிரச்சனைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்க் கட்சிகள் ஒன்றாகச் சந்திக்கும் வாய்ப்புகள் குறைவு என்பதைக் காட்டுகிறதா?

இந்த இடத்தில் மூன்று முக்கியமான விடையப் பரப்புகளில் தமிழ் மக்களுக்குத் தெளிவு அவசியம்.

முதலாவதாக அரசாங்கம் ஒரு புதிய யாப்பைக் கொண்டு வருமா? இந்த அரசாங்கம் எதிர்பாராமல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்ற ஓர் அரசாங்கம். அந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மைகூட புரட்சிகரமானது அல்ல. கோத்தாபய பெற்ற அதே பெரும்பான்மை. எனவே இந்த வெற்றியை எப்படித் தக்கவைப்பது என்ற சவால் தேசிய மக்கள் சக்திக்கு உண்டு. அதைவிட மேலதிகமாக, அண்மையில் ரில்வின் சில்வா சீனாவுக்குப் போனபோது அங்கே சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் அவருக்கு வழங்கிய ஆலோசனை தொடர்பாக சிங்கள ஊடகங்களில் வெளிவந்தது. குறைந்தது 15 ஆண்டுகள் ஆட்சி செய்தால்தான் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய மாற்றங்களைச் செய்யலாம் என்பதே அந்த ஆலோசனையாகும். அதன்படி தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது அதன் வாக்கு வங்கியை அடுத்தடுத்த கட்டங்களுக்கு எப்படி வளர்த்தெடுப்பது என்றுதான் சிந்திக்கும். அப்படிச் சிந்தித்தால் இனப் பிரச்சினையில் கை வைக்கக்கூடாது. இதோ தீர்க்கப் போகிறோம் என்று ஒரு தோற்றத்தைக்கட்டியெழுப்பலாம். அதன் மூலம் காலத்தைக் கடத்தலாம்.

மேலும், இந்த அரசாங்கம் பொருளாதார நெருக்கடியின் விளைவு. பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை நிமிர்த்த வேண்டிய பொறுப்பு அதற்கு உண்டு. அடுத்த தேர்தல்களில் கிடைக்கப் போகும் வெற்றியை அதுதான் பெருமளவுக்குத் தீர்மானிக்கும். எனவே இந்த அரசாங்கம் இனப் பிரச்சினையில் கையை வைத்து நிலைமைகளைக் குழப்புமா?

இரண்டாவது விடயம், எகிய ராஜ்ஜிய பற்றிய வாதப்பிரதிவாதங்கள். சுமந்திரன் கூறுகிறார் அது ஒற்றை ஆட்சியைக் குறிக்காது என்று. மேலும் சுமந்திரன் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு இணைந்து இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு புதிய ஆவணத்தைத் தயாரிக்கப் போவதாகவும் அறிவித்திருக்கிறார். கஜேந்திரகுமார் கூறுகிறார், எகிய ராஜ்ஜிய என்பது ஒற்றை ஆட்சிதான் என்று.

எகிய ராஜ்ஜிய தொடர்பாக யார் சொல்வது சரி என்பதை பொதுமக்கள் எப்படித் தீர்மானிப்பது? இந்த விடயத்தில் வெளிப்படையான, தெளிவான, சாதாரண மக்கள் விளங்கக்கூடிய விவாதப் பரப்புகள் அவசியம். அவ்வாறான விவாத அரங்குகளை தமிழ்மக்கள் மத்தியில் உள்ள குடிமக்கள் அமைப்புகளோ அல்லது பல்கலைக்கழகம் போன்ற அமைப்புகளோ அல்லது தமிழ் சட்டத்தரணிகள் அமைப்போ அல்லது குடிமக்கள் அமைப்போ திறக்க வேண்டும். அதன் மூலம் எகிய ராஜ்ஜிய பற்றி இருக்கும் மயக்கங்கள் தெளிவாகப்பட வேண்டும்.

மூன்றாவது, இது மிகவும் முக்கியமானது. இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது நீண்ட தொடர் நடவடிக்கை. இதில் இறுதியிலும் இறுதியானதுதான் யாப்புருவாக்கம். அதுவே முதலாவதும் கடைசியும் ஆகாது.இனப் பிரச்சனைக்கான தீர்வை யாப்புருவாக்கமாகக் குறுக்கவும் கூடாது. மாறாக இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முதல் முயற்சியாக, மோதலில் ஈடுபட்ட தரப்புக்களுக்கு இடையிலான திறந்த உரையாடல் தேவை. அதன்மூலம் ஒரு சமாதான உடன்படிக்கை அல்லது அரசியல் உடன்படிக்கை எழுதப்பட வேண்டும். தேசங்களை அங்கீகரிக்கும் அந்த உடன்படிக்கையில் இருந்துதான் இனப்பிரச்சனைக்கான தீர்வு எது என்பதனை அதன் சட்டச் சட்டத்துக்குள் வைத்துச் சிந்திக்கலாம்.

இதுதொடர்பாக தமிழ் மக்கள் பேரவையின் தீர்வு முன்மொழிவில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. மோதலில் ஈடுபட்ட இனங்களுக்கு இடையே முதலில் ஒரு சமூக உடன்படிக்கை அல்லது அரசியல் உடன்படிக்கை எழுதப்பட வேண்டும். உதாரணமாக 1988இல் பிரித்தானியாவுக்கும் அயர்லாந்துக்கும் இடையில் எடுத்தப்பட்ட அமைதி உடன்படிக்கையான, பெரிய வெள்ளி உடன்படிக்கை போல ஓர் உடன்படிக்கை எழுதப்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் பேரவையின் முன்மொழிவின் முகப்புரையில் கூறப்பட்டுள்ளது. அங்கிருந்துதான் இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தேடத் தொடங்க வேண்டும். அதன் இறுதிக் கட்டந்தான் புதிய யாப்பாகும்.யாப்பிலிருந்து அதாவது கடைசிக்கட்டத்தில் இருந்து அதைத் தொடங்க முடியாது. தொடங்கவும் கூடாது.

இந்த விபத்து எங்கே நடந்தது என்றால், 2015 செப்டம்பர் மாதம் ஐநாவில் நிறைவேற்றப்பட்ட நிலைமாறுகால நீதிக்கான அதாவது பொறுப்புக் கூறலுக்கான தீர்மானத்தின் விளைவாகத்தான்.

பொறுப்புக் கூறலுக்கான ஐநா தீர்மானத்துக்கு இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியது. எனவே அந்தப் பொறுப்பின் நிமித்தம் நாடாளுமன்றம் சாசனப் பேரவையாக மாற்றப்பட்டு, அதன் கீழ் ஒரு புதிய யாப்பை உருவாக்குவதற்காக வழிநடத்தல் குழுவும் உப குழுக்களும் உருவாக்கப்பட்டன. இந்த நடைமுறைகளின் விளைவுதான் எகிய ராஜ்ஜிய என்று அழைக்கப்படுகின்ற இடைக்கால வரைபு ஆகும்.

2018ல் அந்த இடைக்கால வரைபு நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு கொண்டிருந்த ஒரு காலச் சூழலில் மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தை ஒரு யாப்புச் சதி முயற்சி மூலம் கவிழ்த்தார். அதாவது நிலைமாறு கால நீதியின் பெற்றோரில் ஒருவராகிய மைத்திரி தன் குழந்தையைக் காட்டிக் கொடுத்தார்.

நிலைமாறு கால நீதி என்பது ஒரு தோல்வியுற்ற பரிசோதனை என்று சுமந்திரன் 2021ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்துக் கூறினார் ஐநாவுக்கு ஒரு கூட்டுக் கடிதத்தை எழுதுவதற்கான சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு சொன்னார். தோல்வியுற்ற ஒரு பரிசோதனை எப்படி வெற்றிகரமான ஒரு தீர்வு முன்மொழிவைப் பெற்றெடுத்தது?

நிலைமாறு கால நீதியின் தோல்விக்குக் காரணமே நிலை மாற்றம் நிகழாமல் அங்கே நிலைமாறு கால நீதியை ஸ்தாபிக்க முற்பட்டமைதான். இலங்கைத் தீவைப் பொருத்தவரையிலும் அது வென்றவர்கள் தோற்றவர்களின் மீது திணித்த ஒரு நீதிதான். தென்னாபிரிக்காவைத் தவிர பெரும்பாலான நிலை மாறு கால நீதிக் களங்களில் நிலைமை அதுதான். நூரம்பேர்க் தீர்ப்பாயத்தில் தொடங்கி இலங்கை வரையிலும் நிலைமாறு கால நீதிச் செய்முறைகள் அவ்வாறுதான் காணப்படுகின்றன. வென்றவர்கள் தோற்றவர்களுக்கு வழங்கும் நீதி.

எனவே இனப் பிரச்சனைக்கான தீர்வை யாப்பு உருவாக்கமாகக் குறுக்கக்கூடாது. மாறாக, அதை இனங்களுக்கு இடையிலான உடன்படிக்கையில் இருந்து தொடங்க வேண்டும். மிகக் குறிப்பாக அதற்கு மூன்றாவது தரப்பின் கண்காணிப்பும் மத்தியஸ்தமும் வேண்டும்.

அவ்வாறு மூன்றாவது தரப்புக்கள் தலையிடுவது என்று சொன்னால் தமிழ் மக்கள் போராட வேண்டும். தமிழ் மக்கள் நொதித்தால்தான் தென்னிலங்கை தளம்பும். தமிழ் மக்கள் நொதித்தால்தான் இலங்கைத்தீவின் அரசியல் வலுச் சமநிலை குழம்பும். இலங்கைத் தீவின் அரசியல் வலுச்சமநிலை குலையும் போதுதான் மூன்றாவது தரப்புகள் அதில் தலையிடும். இந்திய-இலங்கை உடன்படிக்கை, ரணில்-பிரபாகரன் உடன்படிக்கை இரண்டும் அவ்வாறு தமிழ் மக்கள் நொதித்தபடியால் கிடைத்தவைதான். நிலைமாறு கால நீதிகூட மகிந்தவைத் தோற்கடிப்பதற்கான இந்திய மற்றும் அமெரிக்கத் தேவைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. மஹிந்தவைத் தோற்கடிப்பதற்கான ஆட்சி மாற்றத்தில் தமிழ் முஸ்லிம் மக்களையும் பங்காளிகள் ஆக்கிய வெளியரசுகள் இலங்கைத் தீவில் மறைமுகமாக ஐநாவுக்கடாக ஒரு தலையீட்டைச் செய்தன.

எனவே தமிழ் மக்கள் நொதிக்கவில்லை என்றால் மூன்றாவது தரப்புகள் தலையிடாது. மூன்றாவது தரப்புகளின் கண்காணிப்பு இல்லாமல் நாடாளுமன்றத்திற்கு ஊடாக ஒரு தீர்வைப் பெற முடியாது. அப்படிப் பெற விளைந்தால் அது அனேகமாக எகிய ராஜ்யவாகதான் இருக்கும். சமஸ்டியாக இருக்காது.குறிப்பாக வெளிப்படைத் தன்மை மிக்க ஒரு சம்'டியாக இருக்காது. நாடாளுமன்றத்துக்கூடாக தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வைப் பெற முடியாது என்பதுதான் கடந்த 75 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் ஆகும். போராடியதால்தான், மூன்றாவது தரப்பின் தலையீடு காரணமாகத்தான் 13ஆவது திருத்தம் கிடைத்தது. அதையும் சிங்கள பௌத்த அரசு கெட்டித்தனமாக ஒற்றையாட்சிக்குள் பெட்டி கட்டிவிட்டது. எனவே தமிழ் மக்கள் நொதிக்க வேண்டும். போராட வேண்டும். போராடவில்லை என்றால் தீர்வு இல்லை.

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# வட்டிக்காரர்களிடம் சிக்கிய முன்னாள் போராளி: கடனை அடைக்க சிறுநீரகத்தை விற்ற பரிதாபம்!

## முன்னாள் போராளிகளுக்கு “கைகொடுக்க” தவறிவிட்டதா எனது வர்த்தக சமூகமும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களும்?

## விடுதலைப் போராட்டத்திற்காக நிதி சேகரித்து அதை தங்களிடத்தே வைத்துக் கொண்டிருக்கும் அன்பரின் “கண்கள் திறக்குமா”?



(18-02-2026)

யுத்தக் களத்தில் காயப்பட்டு, ஒரு கால் முழுவதும் பாதிக்கப்பட்டு, இன்று வாழ்வாதாரத்திற்காக போராடிக்கொண்டிருக்கும் ஒரு முன்னாள் பெண் போராளி, கந்துவட்டி கொடுமையால் தனது சிறுநீரகத்தை விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள சம்பவம் மன்னாரில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மன்னார், மூர் வீதி பகுதியில் வசிக்கும் இப் பெண்மணி, தனது குடும்ப வறுமையைப் போக்கவும், சிறு தொழில் செய்யவும் “சீட்டு“ (Siddu) முறையில் பணம் கட்டியுள்ளார்.

ஆனால், சீட்டு ஆரம்பத்தின் கனிவாக நடந்து கொண்ட பெண் குழுக்கள் மற்றும் வட்டி கும்பல்கள்,காலம் செல்ல செல்ல தங்கள் நடவடிக்கையை தொடங்கியுள்ளனர். அவர் வாங்கிய பணத்திற்கு சட்டவிரோதமான முறையில் வட்டிக்கு மேல் வட்டி (Compound Interest) போட்டு, அவரை மீள முடியாத கடன் சுமைக்குள் தள்ளியுள்ளனர்.

### மிரட்டலும் உடல் உறுப்பு விற்பனையும்

ஏழ்மை நிலையில் இருக்கும் இப் பெண், மற்றும் இவரது குடும்பம் வாடகை வீடு ஒன்றில் உணவகங்களுக்கு சிற்றுண்டிகளை தயாரித்து வழங்கி வரும் வருமானத்தில் வாழ்ந்து வருகிறார்.

மணலாற்றுப் போர்க்களத்தில் ஒரு கால் முற்றாக பாதிக்கப்பட்ட நிலையில், யாருடைய உதவியுமின்றி உழைக்க நினைத்த இவருக்கு கந்துவட்டி கும்பல் பெரிய முட்டுக்கட்டையாக மாறியுள்ளது.

தொடர் மிரட்டல்கள், அவமானங்கள் மற்றும் ”பணத்தை தராவிட்டால் கொலை செய்து விடுவோம்” என்ற அச்சுறுத்தல்களுக்கு பயந்து, வேறு வழியின்றி கொழும்புக்குச் சென்று தனது ஒரு சிறுநீரகத்தை குறைந்த விலைக்கு விற்று அந்தப் பணத்தை வட்டி பணத்துக்காக வழங்கியுள்ளார்.

### தீராத கடன் சுமை

சிறுநீரகத்தை விற்று பண தொகையைக் கொடுத்த பின்னரும், அந்த வட்டி கும்பல் ”இன்னும் வட்டி மீதமுள்ளது” எனக் கூறி அவரைத் தொடர்ந்து துன்புறுத்தி வருகின்றது.

உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள இப்பெண்மணி, தற்போது தற்கொலை எண்ணம் தோன்றும் அளவிற்கு விரக்தியில் உள்ளதாகக் கண்ணீர் மல்க தெரிவிக்கிறார்.

### சமூகத்தின் குரல்

மன்னார் மூர் வீதியில் இத்தகைய சட்ட விரோத வட்டித் தொழில் பல குழுக்களால் தங்கு தடையின்றி நடத்தப்பட்டு வருகிறது. இப் பெண்ணைப் போல இன்னும் பல ஏழைப் பெண்கள் அவர்களிடம் சிக்கி, வெளியில் சொல்ல முடியாமல் சித்ரவதைகளை அனுபவித்து வருகின்றனர்.


”என்னைப் போல இன்னும் பல பெண்கள் இங்கே பாதிக்கப்பட்டுள்ளார்கள். எங்களைக் காப்பாற்ற யாரும் இல்லையா?” என அந்தப் பெண் எழுப்பும் கேள்வி அதிகாரிகளின் காதுகளுக்கு எட்டுமா?

பாதிக்கப்பட்ட இப் பெண்ணுக்கும், அவரைப் போன்ற மற்றவர்களுக்கும் உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும் எனவும், இந்த சட்டவிரோத வட்டி கும்பல்கள் மீது உடனடியாக காவல்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பெண்ணுக்கு உதவி செய்ய விரும்புபவர்கள் அவரது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உதவிகளை முன்னெடுக்க முடியும்.

**தொலைபேசி இலக்கம்: +94 77 763 2388**






## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:


டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரபபவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca




11/24



# அன்பைப் பரிமாறும் தினம்




- குரு அரவிந்தன் -

வெலன்ரைன் தினம் என்பது உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் பலராலும் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி கொண்டாடப்படும் ஒரு கொண்டாட்ட நாளாகும். பொதுவாக அன்பைப் பரிமாறும் தினமாக இதை எடுத்துக் கொள்வதால், “அன்பைப் பரிமாறும் நாள்” என்றும் குறிப்பிடுவர். இத்தினத்தில் வேறுபாடு காட்டாமல் யாரும் யாரிடமும் தங்கள் அன்பைப் பரிமாறிக் கொள்வதால், மனதால் பண்பட்ட யாரும் அதைத் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

அதே சமயம் காதலர்கள் தங்கள் அன்பை வெளிப்படுத்த, அல்லது பரிமாறிக்கொள்ள இந்த நாள் உகந்ததாகவும் இருப்பதால், “காதலர்கள் தினம்” என்றும் குறிப்பிடுவர். சில நாடுகளில் 9 நாட்கள் இதைக் கொண்டாடுவர். காதலைக் கொண்டாடாத நாடுகளே இல்லை என்பதால், தொடக்கத்தில் அன்பைப் பரிமாற காதலர்கள் இயற்கை தந்த மலர்களையும், அவர்களுக்குப் பிடித்தமான இனிப்பு போன்றவற்றையும் பரிமாறினர். அதன் பின் கையால் எழுதிய வாழ்த்து மடல்களையும், தொடர்ந்து அச்சு யந்திரங்கள் வந்ததால் அச்சிட்ட வாழ்த்து மடல்களைப் பரிமாறும் வழக்கமும் அறிமுகமானது.

வெலன்ரைன் தினம் எப்படி அறிமுகமானது என்பதைப் பார்ப்போம். மூன்றாம் நூற்றாண்டில் ரோமானிய அரசனான இரண்டாம் கிளாடியஸ் பேரரசர் இரண்டு பேருக்குத் தண்டனை கொடுத்து அவர்களை பெப்ரவரி 14 ஆம் திகதி தூக்கிலிட்டார். வெவ்வேறு ஆண்டுகளில் அவர்கள் தூக்கிலிடப் பட்டாலும் அவர்களைப் போன்ற தியாகிகளுக்கு வெலன்ரைன் என்று பெயரிட்டார்கள். பெப்ரவரி 14 ஆம் திகதி அன்று நடந்ததால், அவர்கள் செய்த தியாகம் புனித காதலர் தினமாகப் 14 ஆம் நூற்றாண்டில் இருந்து கொண்டாடப் படுகின்றது. இதைப்பற்றி, “செயிண்ட் வெலன்ரைன் தினத்திற்கானது இது, ஒவ்வொரு பறவையும் தன்னுடைய இணையைத் தேடி வரும்போது” என்று ஜெப்ரி சாஸர் ஓரிடத்தில் குறிப்பிட்டிருந்தார்.

ஆங்கிலத்தில் “லவ்” என்று சொன்னால் அது அன்பைக் குறிக்கும். யாரைப் பார்த்தும் “லவ்யூ” சொல்ல முடியும், தவறாக எடுக்க மாட்டார்கள். ஆனால் தமிழில் அப்படி அல்ல, அன்பு என்ற சொல்லை இன்னும் விளக்கமாக, தெளிவாகப் பிரித்திருக்கிறார்கள். அன்பு, பாசம், காதல், நேயம், பக்தி என்று அன்புக்குத் தனித்தனியாக விளக்கம் தந்திருக்கிறார்கள்.

8 ஆம், 9 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த நாயன்மார்களின் பாடல்களில் இருந்து ஓரளவு இதைப் புரிந்து கொள்ள முடியும். அளவுகடந்த பக்தி எப்படித் தெய்வீகக் காதலாகிறது என்பதைப் பாருங்கள். காதலர்கள் கிளியை, அன்னத்தை, புறாவை எல்லாம் தூது விடுவார்கள். “சிறையாரும் மடக்கிளியே இங்கே வா, துறையாரும் கடல் தோணிபுரத்து ஈசன் துளங்கும் இளம் பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயோ..?” என்று திருஞானசம்பந்தர் பாடுகின்றார். “முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள், பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள், தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள், தலைப்பட்டாள் நங்கை தலைவன் தானே” என்று திருநாவுக்கரசர் பாடுகின்றார்.

“மலர்ச்சோலைப் பசுங்கிளியே சொல்லுங் குருநாதர் மாலைதனை நீ வாங்கி வா” என்று காங்கேசந்துறை இறங்கணியவளை பெண்ணொருத்தி அழகன் முருகனுக்குத் தூது விடுவதாக 17 ஆம் நூற்றாண்டில் வரதபண்டிதர் பாடுகின்றார்.

உலகெல்லாம் காதலர்கள் இருப்பதால், அன்பைப்பரிமாற வயதெல்லை இல்லை என்பதால் உலகெங்கும் இப்போது கொண்டாடப் படுகின்றது. சொல்லாத காதலைச் சொல்வதற்குச் சிறந்த நாள் மட்டுமல்ல, ஒருதலைக்காதல் உடைந்து போவதும் இந்த நாளில்தான். சில சமூக மக்களிடையே காதல் என்ற வார்த்தையைக் கேட்டாலே, சிலருக்குக் கசப்பதும் உண்டு. மேலை நாட்டுப் பண்பாடுகளை எங்களிடம் திணிக்கிறார்கள் என்று அரசியல் செய்பவர்களும் உண்டு. இதய வடிவலான உருவம், இரட்டைப்புறாக்கள், புறாக்கள் தூதுபோவது போன்ற ஓவியம், சிறகுகளுள்ள தேவதையின் உருவம், மன்மத அம்புகள் போன்றவற்றைக் காதலர் தின குறியீடுகளாகச் சிலர் பாவிப்பர். பொதுவாக சிகப்பு ரோஜா மலர்கள்தான் கொடுப்பார்கள். 19 ஆம் நூற்றாண்டில் வாழ்த்து மடல்களை இங்கிலாந்தில் எஸ்தர் ஹாவிலண்ட் என்பவர்தான் கையால் வரைந்து விற்பனை செய்யத் தொடங்கினார். நத்தார், புதுவருட வாழ்த்து மடல்களுக்கு அடுத்ததாக அதிகம் விற்பனையாகும் மடல்கள் காதல்தின வாழ்த்து மடல்கள்தான். இங்கே வடஅமெரிக்காவில் பெண்களைவிட ஆண்கள்தான் வெலன்ரைன் தினத்திற்காக அதிகம் செலவிடுவதாகக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

விகடனில் வெளிவந்த எனது முதற்கதை “காதல் என்பது.” காதல் திருமணம் செய்த இருவரின் புரிந்துணர்வு பற்றிய கதை. ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து கனடா உதயன் பத்திரிகையில் காதலர்தினக் கதை எழுதிவந்தேன். தொடர்ந்து 16 வருடங்கள் காதலர்தினக் கதை எழுத முடிந்ததால் அதுவே ஒரு சாதனையாகி விட்டது ஆனந்தவிகடன் ஆசிரியர் காதலர்தின மலரில் வெளியிட காதலர்தினக் கதை ஒன்று கேட்டிருந்தார். “அவளுக்கு ஒரு கடிதம்” என்ற கதையை அனுப்பி வைத்தேன். அந்த மலரில் அதிக வாசகர்கள் வாசித்த, விமர்சித்த கதை அது என்று ஆசிரியர் பின்பு குறிப்பிட்டிருந்தார். இந்தியா, இலங்கை, லண்டன், ஜெர்மனி, கனடா ஆகிய ஐந்து நாடுகளிலும் அதே வருடம், அதே மாதம் எனது காதலர்தினக் கதைகள் வெளிவந்து சாதனை படைத்திருந்தது. வேறு எந்த மொழியிலும் இப்படியான “காதலர்தின” சாதனை இதுவரை இடம் பெறவில்லை.

பிரான்ஸ் நாட்டில் காதலர் தினத்தை “செயிண்ட் வெலன்ரைன்” என்றும், போத்துக்கல் நாட்டில் “ஆண்கள்-பெண்கள் தினம்” என்றும், சுவீடன் நாட்டில் “அனைத்து இதயங்களின் நாள்” என்றும், பின்லாந்தில் “நண்பர்கள் தினம்” என்றும், துருக்கியில் “இனிய இதயங்களின் தினம்” என்றும், கௌதமாலாவில் “காதல்-நட்பு பாரட்டுத் தினம்” என்றும் பிலிப்பைன்ஸ் நாட்டில் “இதயங்களின் தினம்” என்றும் இப்படி ஒவ்வொரு நாட்டவர்களும், அன்பைப் பரிமாறுவதற்கு ஏதோ ஒரு பொருத்தமான பெயரைச் சூடியுள்ளார்கள். யப்பான் நாட்டில் பெண்கள்தான் இத்தினத்தில் ஆண்களுக்கு இனிப்புக் கொடுக்க வேண்டுமாம். யார் அதிக இனிப்பு சேகரிக்கிறார் என்பதில் இருந்து அவரது பிரபலம் வெளிப்படுமாம். இதோ யப்பானியக் கவிதையில் இருந்து சில வரிகள்.

*என் காதலனே, ஆடை ஒருபுறம் மாறிட கனவு வரும்*
*உண்மையாக உன்னையே நேரில் கண்டது போல!*
*சேராவிடினும் நான் துன்புறமாட்டேன், இந்த தலையணையை*
*நான் என்று எண்ணிடுவாய் அணைத்து உறங்கிடுவாய்!*

சங்க இலக்கியத்தை எடுத்துப் பார்த்தால், காதலர்கள் ஊடலும் கூடலும் பிரிதலும் நோதலும் இரங்கலுமாகத் தம்முள் கொள்ளும் காதலுணர்வுகள் சொல்லிப் புரிய வைக்க முடியாதவை. இப்போது ஆறாம்நிலத்திணையான கனடா பனிப்புலத்தின் “உருகுதலும்” இந்த ஐந்துடன் சேர்ந்து கொள்கிறது. காதலர் தினத்தைத்தான் அன்று தமிழர்கள் “காமன் பண்டிகை” அல்லது “இந்திரவிழா” என்று 28 நாட்கள் கொண்டாடினார்கள். அந்த நாளில் தமிழர் கொடுத்த காதலர் தினப் பரிசு என்வென்று பாருங்கள், “மாசறு பொன்னே, வலம்புரி முத்தே, காசறு விரையே, கரும்பே தேனே..” என்று வார்த்தைகளால் காதலிக்குப் புகழாரம் சூட்டினார்கள். அப்படிப் பெண்களை வர்ணிக்கும்போது, வேறு எந்த ஒரு பரிசும் அதற்கு நிகராகாது என்பதையும் ஆண்கள் தெரிந்து வைத்திருந்தனர்.

தோல்விகளைக் கண்டு மனம் தளராதீர்கள், வாழ்ந்து காட்டுங்கள். நீங்கள் நினைப்பது போல, “வெற்றிகள் எல்லாம் வெற்றிகளுமில்லை, தோல்விகள் எல்லாம் தோல்விகளுமில்லை! காதல் வலிகளும் ஒரு நாள் கடந்து செல்லும்.”

*“காதலினால் மானுடர்க்குக் கவிதையுண்டாம்*
*கானமுண்டாம், சிற்ப முதற் கலைகளுண்டாம்*
*ஆதலினாற் காதல் செய்வீர், உலகத்தீரே!*

என்று புதுமைக்கவி பாரதியும் பாடியிருக்கின்றான். ஆதலினாற் காதல் செய்வீர் உலகத்தீரே!

கனடிய செய்திகள்
Canadian News

# மொன்றியால் தொழிலதிபர் AMR முத்தையா ராஜ்கோபால் "ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையம்" நிதியத்திற்கு வழங்கிய 100,040.00 டாலர் காசோலையை சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் நேரடியாகப் பெற்றுக்கொண்டார்




கனடா - ஸ்காபுறோ நகரில் அமையவுள்ள “தமிழ்ச் சமூக மையம்” நிதிசேகரிப்பு முயற்சிகளில் சில குழுக்களாக பலர் இயங்கிவந்தாலும் தொழிலதிபரும் சமூக ஆர்வலருமான சாந்தா பஞ்சலிங்கம் அவர்களின் பங்களிப்பு என்பது தனித்துவமானது என்பதை தமிழ்க் கனடியர்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர்.

அவரது முயற்சிகளின் விளைவாகவும் அவரோடு இணைந்து அவ்வப்போது செயற்படுகின்ற நண்பர்கள் சிலரின் உந்துதலோடும் மொன்றியால் மாநகர் வாழ் தொழிலதிபர்களில் ஒருவரான முத்தையா ராஜ்கோபால் அவர்கள் நிதியத்திற்கு ஒரு இலட்சத்து நாற்பது கனடிய டாலர்கள் ($100,040.00) வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்த வகையில் ரொறன்ரோவிருந்து சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் மொன்றியால் மாநகர் சென்று மேற்படி முழுத்தொகைக்கான காசோலையை AMR முத்தையா ராஜ்கோபால் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

A.M.R Cash & Carry நிறுவனத்தின் பிரதான அலுவலகத்தில் இடம்பெற்ற காகோலை கையளிப்பு வைபவத்தில் AMR Cash & Carry ஸ்தாபனத்தின் பங்காளரும் முத்தையா ராஜ்கோபால் அவர்களின் புதல்வருமான ராஜன் அவர்களும் மொன்றியால் வாழ் சமூக மற்றும் மொழி. சமயம் சார்ந்த செயற்பாட்டாளர் வாகீசன் நடராஜா மற்றும் ரொறன்ரொவிருந்து சாந்தா பஞ்சலிங்கம் அவர்களோடு சென்றிருந்த ஊடகவியலாளர்களும் தமிழ்ச் சமூக மையத்திற்கு தங்கள் நிதிப் பங்களிப்பு வழங்கியவர்களுமான “யுகம் வானொலி” கணபதி ரவீந்திரன் மற்றும் “கனடா உதயன்” லோகேந்திரலிங்கம் ஆகியோரும் நிற்பதைக் காணலாம். AMR முத்தையா ராஜ்கோபால் அவர்கள் வழங்கிய இந்த தொகையானது மொன்றியால் மாநகர அன்பர்கள் வழங்கிய பங்களிப்புக்களில் மிக அதிகமானது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



- UTHAYAN LJI Journalist Ganesh -

# மரண அறிவித்தல்



**திரு. ராமநாதன் உதயகுமார்**

(யாழ்ப்பாணம் - கரம்பொன் ஊர்காவற்றுறை)

தோற்றம் 14-05-1968
மறைவு 17-02-2026

**யாழ்ப்பாணம் — கரம்பொன் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், கனடா ரொரண்ரோவை வதிவிடமாகவும் கொண்ட ராமநாதன் உதயகுமார் அவர்கள் 17 — 02 — 2026 செவ்வாய்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான ராமநாதன் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும்,
சோதிநாதன் - வாலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும்.
ஜெயதேவி (ஜெயந்தி) அவர்களின் ஆசைக்கணவரும், சாரினி அவர்களின் பாசமிகு தந்தையும்.
மஞ்சு, வனிதா, சாந்தி. நடா, நந்தினி, சுபா ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசரட்ணம், செல்வநாதன், கிருபா, கிருபாகரன், மோகனா, பவான் ஆகியோரின் மைத்துனரும்,
ரூபன், ரூபி, சசி, சாந்தி, கலா, குமா ஆகியோரின் மைத்துனரும், மதி. நந்தன், ராஜன், தேவன், கிருபா, பாலா ஆகியோரின் சகலனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.**

தகவல்: குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு:
ஜெயதேவி (ஜெயந்தி, மனைவி) cell 416-269-7849
சாரினி - மகள் cell 416-804-9301.
நடா- சகோதரன் cell 647-7780132,
நந்தன் - சகலன் cell 647-504-3401
ரூபன்- மைத்துனன் +41789611514
செல்வராணி (மஞ்சு, சகோதரி) Cell 647-686-1467





# முன்னாள்–இன்னாள் எம்.பி.க்களுக்கு அநுரகுமார அரசு வைத்த "ஆப்பு"




**"முன்னாள் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என 330 பேருக்கும் 182 மறைந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக அவர்களின் வாழ்க்கைத் துணைகளுக்கும் என 512 பேருக்கு இவ்வாறு ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது. இதற்கமைய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்திற்காக அண்ணளவாக மாதமொன்றுக்கு 3.5 கோடி ரூபா வரையில் செலவிடப்படுகின்றது."**

-------------------------------------------------- **கே.பாலா -**

இலங்கை சனத்தொகை 2 கோடி 17 இலட்சமாகவுள்ள நிலையில் இந்தளவு குறைந்த மக்கள் தொகையுள்ள நாட்டுக்கு 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற எண்ணிக்கை மிக அதிகமானது என்ற விமர்சனங்களும் இந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகள், கொடுப்பனவுகள், சலுகைகள், ஓய்வூதியம் குறித்து கடும் குற்றச்ச்சாட்டுக்களும் முன்வைக்கப்படும் நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் இதில் முதல் அதிரடியாக முன்னாள், இன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்திற்கு "ஆப்பு" வைத்துள்ளது.

அநுரகுமார அரசாங்கத்தினால் இலங்கையின் முன்னாள், இன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை நிறுத்துவதற்கான பாராளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்) திருத்த சட்ட மூலம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட நிலையில் அது 152 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த சட்டமூலத்திற்கு ஆதரவாக 154 வாக்குகளும் எதிராக 2 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையிலேயே 152 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

1977 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்ற ஓய்வூதியச் சட்டத்தை ரத்து செய்து, பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதிய உரிமையை நீக்குவதற்கான பாராளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்) சட்டமூலத்தை நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்சன நாணயக்கார பாராளுமன்றத்தில் முதலாம் வாசிப்புக்காக 2026.01.07 ஆம் திகதி சபைக்கு சமர்ப்பித்தார். பாராளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்) தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்ற ஓய்வூதியச் சட்டத்தினை நீக்குவதற்காக இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய அரசு பேரவையின் 1977ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க பாராளுமன்ற ஓய்வூதிய சட்டத்தை நீக்குவதற்கான சட்டமூலம் வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டது.

இந்நிலையில் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட பாராளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்) சட்டமூலத்தை அரசியலமைப்பின் 121 (1) உறுப்புரையின் பிரகாரம் பல்வேறு தரப்பினர் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தினர். இதற்கமைய, உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட "பாராளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்)" சட்டமூலம் தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை சபாநாயகர் 2026.02.06 ஆம் திகதியன்று பாராளுமன்றத்துக்கு அறிவித்தார். இந்த சட்டமூலம் முழுமையாகவும் அல்லது அதன் எந்தவொரு ஏற்பாடும் அரசியலமைப்புடன் முரண்படுவதில்லையென்பதால் அதனைப் பாராளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மை யொன்றின் மூலம் நிறைவேற்றப்படலாம் என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இவ்வாறான நிலையிலேயே பாராளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்) திருத்த சட்ட மூலம் கடந்த 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விவாதத்தின் முடிவில் சபை முதல்வரான அமைச்சர் பிமல் ரத்நாயக்க சட்டமூலத்தை நிறைவேற்ற வாக்கெடுப்பைக் கோரினார். இதனையடுத்து இலத்திரனியல் முறையில் இடம்பெற்ற வாக்கெடுப்பிலேயே சட்டமூலத்திற்கு ஆதரவாக 154 வாக்குகளும் எதிராக 2 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 152 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டமூலத்திற்கு ஆதரவாக அரசாங்கத்துடன் இணைந்து சுயேட்சைக் குழு 17 இன் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான அர்ச்சுனா இராமநாதன், புதிய ஜனநாயக முன்னணி எம்.பி. ரவி கருணாநாயக்க ஆகியோர் வாக்களித்த நிலையில் எதிராக புதிய ஜனநாயக முன்னணி எம்.பி. சாமர சம்பத் தசநாயக்க, பொதுஜன பெரமுன எம்.பி சானக மாதுகொட ஆகியோருடன் ஐக்கியமக்கள் சக்தி எம்.பி.க்கள் சிலரும் வாக்களித்த நிலையில் இந்த வாக்களிப்பில் தமிழரசுக்கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, ஐக்கிய தேசியக்கட்சி, தொழிலாளர் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், சர்வஜன அதிகாரம் ஆகிய கட்சிகள் கலந்துகொள்ளவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், அமைச்சர்கள், அமைச்சரவை அமைச்சர்கள், பிரதமர் என்றவாறாக வகைப் படுத்தப்படுகின்றன. இதில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு மட்டுமே பாராளுமன்றத்தினால் வழங்கப்படுகின்றது. ஏனையவர்களின் கொடுப்பனவுகள் சம்பந்தப்பட்ட அமைச்சினாலேயே வழங்கப்படும். இதேவேளை தற்போதைய அநுரகுமார அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சர்கள், அமைச்சரவை அமைச்சர்கள் பதவிகள் இல்லை. பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதி அமைச்சர்கள், அமைச்சர்கள் என்ற 3 வகையினர் மட்டுமே உள்ளனர்.

அந்தவகையில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கான மாதகொடுப்பனவாக 54,285. ரூபா வழங்கப்படுகின்றது. அத்துடன் கேளிக்கைப் படியாக 1000 ரூபாவும் சாரதிகளுக்கான கொடுப்பனவுப்படியாக 3,500 ரூபாவும் (அரசாங்கத்தால் அவருக்கு சாரதியொருவர் வழங்கப்படாவிடின் மாத்திரமே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சாரதிகள் படி செலுத்தப்படுகின்றது) பாராளுமன்ற அமர்வுக்கு சமுகமளிப்பதற்காக நாள் ஒன்றுக்கு 2,500 ரூபாவும், பாராளுமன்ற அமர்வு இல்லாத தினங்களில் நடைபெறும் ஒவ்வொரு குழுக் கூட்டத்திற்கும் சமுகமளிப்பதற்காக 2,500 ரூபாவும் (அமர்வு தினங்களில் நடைபெறும் குழுக் கூட்டத்திற்கு சமுகமளிப்பதற்கு கொடுப்பனவு செலுத்தப்படுவதில்லை) அலுவலகமொன்றைப் பராமரிப்பதற்கு 100,000 ரூபாவும் வழங்கப்படுகின்றது. அத்துடன் ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் தொகுதிக்கான நிதி ஒதுக்கீடாக வருடமொன்றுக்கு ஒரு கோடி ரூபா வழங்கப்படும்.

அத்துடன் பாராளுமன்றத்திலிருந்து ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்கான தூரம் மற்றும் ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது தினத்தில் 1 லீற்றர் டீசலின், பெற்றோலின் அங்கீகரிக்கப்பட்ட சந்தை விலை ஆகியவற்றின் அடிப்படையில் எரிபொருள் படிகள் செலுத்தப்படுகின்றன. (உதாரணமாக கொழும்பு 283.94 லீற்றர்கள், கம்பஹா மற்றும் களுத்துறை 355.58 லீற்றர்கள், வடக்கு மாகாணம் 500 லீற்றர்கள்) நிலையான இணைப்பு மற்றும் கையடக்கத் தொலைபேசிக்காக மாதாந்தம் 50,000 ரூபாவும் வழங்கப்படும். (தொலைபேசி விலைப்பட்டியல்களுக்கான கொடுப்பனவுகளோ அல்லது மீளளிப்புகளோ இல்லை). பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தின் 4 தனிப்பட்ட பணியாட்டொகுதி உறுப்பினர்களின் போக்குவரத்து செலவுகளுக்காக மாதாந்தம் 10,000 ரூபாவழங்கப்படும் (ஒவ்வொருவருக்கும் 2,500 ரூபா வீதம்). இலவச தபாற்கட்டண வசதிகளாக 350,000 ரூபா பெறுமதியான முத்திரைகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் வருடாந்தம் வழங்கப்படுகின்றன. (காலாண்டிற்கு 87,500 ரூபா).

இதேவேளை பிரதி அமைச்சர்களுக்கான மாதாந்த கொடுப்பனவாக 65000 ரூபாவும் அமைச்சர்களுக்கான மாதந்தக் கொடுப்பனவாக 85000 ரூபாவும் பிரதமறுக்கன் கொடுப்பனவாக 95000 ரூபாவும் வழங்கப்படுவதுடன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் இவர்களுக்கும் வழங்கப்படும். இந்தவகையில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு 7 இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. எனினும் ஓய்வூதியம் வழங்குவதற்காக பாராளுமன்ற உறுப்பினர். பிரதி அமைச்சர். அமைச்சர், பிரதமரின் அடிபடைக் கொடுப்பனவு மட்டுமே கணக்கில் எடுக்கப்படும். உதாரணமாக பாராளுமனர் உறுப்பினர் ஒருவரின் ஓய்வூதியத்திற்காக அவரின் மாதாந்த கொடுப்பனவான 54,285. ரூபாவே கணக்கில் எடுக்கப்பட்டு மாதாந்த ஓய்வூதியமாக 40000-45000 ரூபாவுக்கு இடைப்பட்ட தொகையே வழங்கப்படும்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தைப் பொறுத்த வரையில் ஐந்து வருடங்கள் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்த ஒருவருக்கே இந்த ஓய்வூதியம் கிடைக்கின்றது. அரசாங்க சேவையை எடுத்துக் கொண்டால் குறிப்பிட்ட வருடங்களுக்கான சேவையைப் பூர்த்திசெய்த ஒருவரேமுழுமையான ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். எனினும் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரையில் ஐந்து வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தால் முழுமையான ஓய்வூதியத்தைப்பெறுவதற்கான தகுதியைப் பெறுகின்றார். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் எத்தனை தடவைகள் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றார் என்பது கணக்கில் எடுக்கப்படாது. 25 வருடங்களாக தொடர்ந்தும் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஒருவருக்கும் 5 வருடங்கள் மட்டுமே பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஒருவருக்கும் ஒரே அளவான ஓய்வூதியமே வழங்கப்படும்.

அந்தவகையில் தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் பெறுபவர்கள் பற்றிய விபரங்களை எடுத்துப் பார்த்தால் 2025ஆம் ஆண்டு ஜனவரி வரையிலான தகவல்களுக்கு அமைய ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என 330 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் 182 மறைந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக அவர்களின் வாழ்க்கைத் துணைகளுக்கும் ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது. ஏறத்தாழ 512 பேருக்கு இவ்வாறு ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது. இதற்கமைய ஓய்வுபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக மாதாந்தம் ஏறத்தாழ 23 மில்லியன் ரூபாவும் மறைந்த பாராளுமன்றஉறுப்பினர்களின் துணைகளுக்காக மாதாந்தம் 11 மில்லியனுக்கு அதிகமான ரூபாவும், தங்கி வாழ்பவர்களுக்காக 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டு வருகின்றது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்திற்காக அண்ணளவாக மாதமொன்றுக்கு 3.5 கோடி ரூபாவரையில் ஒதுக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையில்தான் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் என்பது நாட்டுக்குப்பெரும் சுமையான விடயமாக இருந்து வருகின்றது. இதனால் பொதுமக்களின் பணம் வீண் விரயமாவதால் பாராளுமன்றஉறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை இரத்துச் செய்வோம் என தேசிய மக்கள் சக்தியினால் தேர்தல் நேரத்தில் மக்களுக்குவழங்கப்பட்ட உறுதிமொழிக்கு அமைய பாராளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்) சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு கடந்த 17 ஆம் திகதி விவாதத்திற்கு எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 19 பக்கம்)

# திருமணம், சோதிடம், கோள் பயம் - அறிவியல் பார்வையில் ஒரு விளக்கம்

- நக்கீரன் -

முன்னுரை

தமிழ்ச் சமூகத்தில் திருமணம் என்பது ஆண், பெண் என இரண்டு தனிநபர்களின் இணைப்பு மட்டுமல்ல அது குடும்பம், சாதி, பொருளாதாரம், மரபு, நம்பிக்கை ஆகிய பல அடுக்குகள் சேர்ந்த ஒரு சமூக நிகழ்வு. அந்த நிகழ்வின் மையத்தில் இன்று வரை வலுவாக நிலைத்திருப்பவை சோதிடம், சாதகப் பொருத்தம், செவ்வாய் தோசம், சனி-ராகு பயம் போன்ற நம்பிக்கைகள்.

பலருக்கு இவை கேள்விக்குரியவை அல்ல; "எப்போதும் இப்படித்தான்" என்ற இயல்பான நடைமுறைகள். ஆனால் நவீன சமூகத்தில் வாழும், கல்வி பெற்ற, தர்க்க சிந்தனை கொண்ட மனிதனுக்கு ஒரு அடிப்படை கேள்வி எழுகிறது:

திருமணம் போன்ற வாழ்நாள் முடிவுகளை, அறிவியல் ஆதாரம் இல்லாத சோதிட நம்பிக்கைகளின் மீது வைத்துக் கட்டுவது சரியா?

இந்தக் கட்டுரை அந்தக் கேள்வியை அறிவியல், மனவியல், சமூக விளைவுகள் ஆகிய மூன்று கோணங்களில் ஆராய முயல்கிறது.


---

**சோதிடம் இராசிச் சக்கரமும் - உண்மை என்ன?**

இராசிச் சக்கரம் என்பது சூரியன் தனது பாதையில் (ecliptic) பூமியைச் சுற்றிவரும் போது (இது ஒரு மாயத் (illusion) தோற்றம். பூமிதான் சூரியனைச் சுற்றிவருகிறது).

**இராசி நட்சத்திரங்களின்** (Zodiac constellations) **வழியாக சூரியன் தனது பாதையில் பயணிக்கிறது.**

பூமியிலிருந்து வானத்தைப் பார்க்கும் ஒருவருக்கு, ஓர் ஆண்டு காலப்பகுதியில் சூரியன் வானில் ஒரு குறிப்பிட்ட பாதையில் நகருவது போலத் தோன்றுகிறது. இந்தச் சூரிய பாதையை ஆங்கிலத்தில் நஉடனிவஉை என்று கூறுவர். இது




நட்சத்திரங்களின் பின்னணியில் மேலும் கீழும் 8 பாகை அகலத்தில் உள்ள இராசி நட்சத்திரங்களின் (Zodiac constellations) வழியாக செல்கிறது. அது ஒரு பட்டி (belt) வடிவத்தில் காணப்படுகிறது.

சூரிய மண்டலத்தின் கோள்களும் (planets) இந்தப் பாதையின் அருகே காணப்படுகின்றன, ஏனெனில் அவற்றின் வலயப்பாதைகள் பூமியின் வலயப்பாதைகளுடன் கிட்டத்தட்ட சமமான நிலையில் உள்ளன. சந்திரனும் (Moon) இவ்வேளையில் நெருங்கியதாகத் தோன்றுகிறது, ஆனால் சந்திர வலயச் சுழற்சிகள் (lunar nodes) காரணமாக சிறிது மாறுபட்டிருக்கும். சூரிய பாதையை (ecliptic) எனப் பெயர் வைத்திருக்கப்படக் காரணம், சூரிய மற்றும் சந்திர கிரகணம் அப்பாதையை கடந்து போகும் போது மட்டுமே சூரிய - சந்திர கிரகணங்கள் நிகழ்கின்றன.


வானத்தை 360 பாகையாகக் கருதி, அதை *12 சம பகுதிகளாக தோதிடர்கள் பிரித்துக் கொண்ட* ஒரு கருத்தியல் ஆகும். மேடம் முதல் மீனம் வரை உள்ள இராசிகள், இயற்கையில் செயல்படும் சக்திகள் அல்ல் தொலைவில் காணப்படும் விண்மீன் கூட்டங்களை ஒன்றோடு ஒன்று தொடுத்த போது ஒரு உருவம் தெரிந்தது. அவை ஆடு, மாடு, சிங்கம், போல் காணப்பட்டன. அவை மனிதன் தன்னிச்சையாககக் கொடுத்த பெயர்கள் மட்டுமே. உண்மையில்.

**12 இராசிகள்**




**இந்த இராசிகளின் நீளம் சீராக இல்லாமல் பெரிதும் சிறிதுமாகக் காணப்படுகிறது**

**இராசிகளின் சரியான தூரம் (பாகை)**





அறிவியல் அடிப்படையில் பார்த்தால்:

- கோள்களின் ஈர்ப்பு விசை மனித வாழ்க்கையைப் பாதிக்கும் அளவுக்கு இல்லை (Plait, 2002)
- புதன், சனி போன்ற கோள்களின் ஈர்ப்பு விசை, ஒரு பிரசவ அறையில் இருக்கும் மருத்துவரின் ஈர்ப்பை விடவும் குறைவு
- இராகு, கேது போன்றவை கோள்களே அல்ல; சூரியன்-சந்திரன் பாதைகள் சந்திக்கும் கணிதப் புள்ளிகள் (Nodes). சோதிடம் இந்தக் கணிதப் புள்ளிகளை இராகு, கேது என அழைக்கின்றன.
- பூமியின் அச்சு மாறுதலால் (Precession of Equinoxes) சோதிடம் கூறும் இராசிகள் இன்று உண்மையான வானியல் நிலைகளுடன் பொருந்துவதில்லை (Aveni, 1997)

இந்த அடிப்படைகளைப் பார்க்கும் போது, சோதிடம் என்பது சோதிக்கக்கூடிய அறிவியல் கோட்பாடு அல்ல. அது சான்றுகளால் எண்பிக்கப்படவில்லை மறுக்கப்படும் போதும் தன்னை மாற்றிக் கொள்ளவில்லை. இதுவே அறிவியல் அல்ல என்பதற்கான முக்கிய அடையாளம்.

**3 சூரியனில் இருந்து எட்டுக் கோள்களின் தூரம்.**




வானத்தை 360 பாகையாகக் கருதி, அதை 12 சம பகுதிகளாக தோதிடர்கள் பிரித்துக் கொண்ட ஒரு கருத்தியல் ஆகும். மேடம் முதல் மீனம் வரை உள்ள இராசிகள், இயற்கையில் செயல்படும் சக்திகள் அல்ல் தொலைவில் காணப்படும் விண்மீன் கூட்டங்களுக்கு மனிதன் கொடுத்த பெயர்கள் மட்டுமே. உண்மையில் இந்த இராசிகளின் நீளம் சீராக இல்லாமல் பெரிதும் சிறியதுமாகக் காணப்படுகிறது.

கிரகங்களின் ஈர்ப்பு விசை - எளிய கணக்குடன் விளக்கம்

ஈர்ப்பு விசை அளவை கணக்கிட நியூட்டனின் விதி பயன்படுகிறது: $F = G\times(M_1M_2/r^2)$

இங்கு: F = ஈர்ப்பு விசை

G = நிலையான மதிப்பு

$M_1M_2$ = இரண்டு பொருள்களின் நிறை

r = அவற்றுக்கிடையிலான தூரம்

இந்தச் சமன்பாட்டில் முக்கியமானது:

- தூரம் அதிகரித்தால் விசை மிகவும் குறைகிறது ($r^2$ காரணமாக).

---

**1. பிரசவ அறையில் இருக்கும் மருத்துவர்**

ஒரு 80 கிலோ நிறையுடைய மருத்துவர், குழந்தையிலிருந்து 0.5 மீட்டர் தூரத்தில் உள்ளார் எனக் கொள்வோம்.

இந்த நிலையில் உருவாகும் ஈர்ப்பு விசை மிகவும் சிறியதாக இருந்தாலும், அருகாமை காரணமாக அது கணக்கிடத்தக்க அளவில் இருக்கும்.

---

**2. செவ்வாய்** (Mars) **கிரகத்தின் ஈர்ப்பு தாக்கம்**

செவ்வாய் கிரகம் பூமியிலிருந்து குறைந்தபட்சம் சுமார் 5.6 கோடி கி.மீ. தூரத்தில் இருக்கும்.

அதன் நிறை மிகப் பெரியதாயினும், மிகப்பெரிய தூரம் காரணமாக அதன் ஈர்ப்பு தாக்கம்:


- மருத்துவரின் ஈர்ப்பை விட பல மடங்கு குறைவு

---

**3. சனி** (Saturn) **கிரகத்தின் தாக்கம்**

சனி மிகப்பெரிய கிரகம். ஆனால் அது பூமியிலிருந்து சுமார் 120 கோடி கி.மீ. தூரத்தில் உள்ளது.


- அதன் ஈர்ப்பு தாக்கம் மனிதன் மீது மிக மிகச் சிறியது
- அன்றாட பொருட்களின் ஈர்ப்பையும் விட குறைவு



Distances from the Sun

| Planet | Copernicus | Modern Value |
|---|---|---|
| Mercury | 0.38 AU | 0.39 AU |
| Venus | 0.72 AU | 0.72 AU |
| Earth | 1.00 AU | 1.00 AU |
| Mars | 1.52 AU | 1.52 AU |
| Jupiter | 5.2 AU | 5.20 AU |
| Saturn | 9.2 AU | 9.54 AU |

ஒரு யுரு என்பது பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலான தூரம் 150 மில்லியன் மைல்கள்.




**சனி - ராகு: ஏன் இத்தனை பயம்?**

சனி, ராகு என்ற சொற்கள் பலருக்குள் உடனடி அச்சத்தை உருவாக்குகின்றன. வாழ்க்கையில் ஏற்படும் தாமதம், இழப்பு, நோய், மன அழுத்தம் போன்ற இயல்பான அனுபவங்களுக்கு மனிதன் வெளிப்புறக் காரணம் தேடினான். அந்தக் காரணங்களுக்கே சனி, ராகு என்று முகம் கொடுத்தான்.

இந்தப் பயம் நிலைத்திருப்பதற்கான காரணங்கள்:

- தெரியாத எதிர்காலம் குறித்த அச்சம்
- "தோஷம்" என்ற பெயரில் உருவான பரிகார பொருளாதாரம்
- சமூக மொழி: ஏழரை சனி, ராகு காலம், கண்ட சனி போன்ற பயமூட்டும் சொற்கள்

ஆனால் ஒரே சனி காலத்தில்:

- சிலர் தொழிலில் உயர்கிறார்கள்
- சிலர் திருமணம் செய்கிறார்கள்
- சிலர் குழந்தை பெறுகிறார்கள்

இதுவே கிரகங்கள் வாழ்க்கையை நிர்ணயிக்கவில்லை என்பதற்கான எளிய, ஆனால் சக்திவாய்ந்த சான்று.

**கோள் பயம் - மனநிலை சிக்கல்**

கோள் பயம் என்பது வானியல் சிக்கல் அல்ல; அது முழுக்க முழுக்க உளவியல் சிக்கல் இந்தப் பயம் மனிதனின் தன் நம்பிக்கையைச் சிதைக்கிறது, செயல் திறனை குறைக்கிறது, முடிவெடுக்கும் துணிச்சலை அழிக்கிறது (French & Richards, 2013).

கோள் பயம் இருக்கும் போது:

- பொறுப்பு கோள்கள்மீது தள்ளப்படுகிறது
- தோல்விக்கு வெளிப்புற காரணம் கிடைக்கிறது
- முயற்சி குறைகிறது
- வாழ்க்கை மெதுவாக நிறுத்தப்படுகிறத

(தொடர்ச்சி 18 பக்கம்)

# இந்திய செயற்கை நுண்ணறிவு (AI) மாநாட்டில் எமது அநுர குமார

## தமிழ் தேசிய அரசியல் நிலைமை மற்றும் பிராந்திய ராஜதந்திர மாற்றங்கள் - ஒரு ஆய்வுப் பார்வை

இலங்கையின் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அவர்கள் தற்போது இந்தியாவில் நடைபெறுகின்ற செயற்கை நுண்ணறிவு (AI) Impact 2026 சர்வதேச மாநாட்டில் பங்கேற்று வருகிறார்.

இந்த மாநாடு 'AI Impact 2026 Summit' என்ற தலைப்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் தலைமையில் பெப்ரவரி 16 முதல் 20 வரை நடைபெறுகிறது. மாநாட்டின் இறுதி நிகழ்வுகள் பிப்ரவரி 20ஆம் தேதி நடைபெற உள்ளன. இந்த மாநாட்டில் 20க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கின்றன் மேலும் 40க்கும் அதிகமான உலகத் தலைவர்கள், அரசியல் மற்றும் பிராந்திய ராஜதந்திரிகள், உத்தியோகபூர்வ தூதுவர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த மாநாட்டில் செயற்கை நுண்ணறிவு உலகத்தின் எதிர்கால வளர்ச்சியில் எவ்வாறு தாக்கம் செலுத்தும்? இந்தியாவின் பங்களிப்பு என்ன? பொருளாதாரம், கல்வி, மருத்துவம், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் அதன் பயன்பாடு எப்படி அமையும் என்பதனை குறித்து விரிவான கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் விசேட அழைப்பை ஏற்று இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக் அவர்கள் இந்தியாவிற்கு பயணம் செய்திருக்கிறார். அங்கு அவருக்கு உத்தியோகபூர்வ மரியாதைகளுடன் வரவேற்பு வழங்கப்பட்டது. ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னரும் அவர் இந்தியாவிற்கு விஜயம் செய்து பிரதமர் மோடி அவர்களை சந்தித்திருந்தார் அந்த சந்திப்பும் ராஜ மரியாதையுடன் நடைபெற்றது.

இதேவேளை, தற்போதைய உலக அரசியல் சூழலில் சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இலங்கையுடன் நெருங்கிய ராஜதந்திர உறவுகளை வலுப்படுத்த முயற்சித்து வருகின்றன.

சீனா அடிக்கடி இலங்கை தலைவர்களை அழைத்து பேச்சுவார்த்தைகளை நடத்துவதோடு, இந்தியாவும் போட்டி நிலைமையில் தனது ராஜதந்திர முயற்சிகளை அதிகரித்து வருகிறது.

இதற்கு முன்னர், பெப்ரவரி மாத ஆரம்பத்தில் ரில்வின் சில்வா அவர்கள் இந்தியாவிற்கு பயணம் செய்து ஜெய்சங்கர் உள்ளிட்ட பல்வேறு மாநிலத் தலைவர்களை சந்தித்திருந்தார். அதன் பின்னர், அண்டை நாடு என்ற ரீதியில் பிரதமர் மோடி அவர்கள் அனுரகுமார திசாநாயக்க அவர்களை இந்த AI Summit நிகழ்விற்கு விசேடமாக அழைத்துள்ளார். மாநாட்டின் போதே பல்வேறு முக்கிய அரசியல் மற்றும் பொருளாதார விவாதங்களும் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க விஜயத்தின் போது அவர் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். மேலும், இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுடனும் தனிப்பட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

அதனைத் தொடர்ந்து, ஆசியா-பசிபிக் பிராந்திய தலைவர்களுடனும் ஜனாதிபதி பல்வேறு கலந்துரையாடல்களில் ஈடுபட்டார். இந்த சந்திப்புகளில் அரசியல், பொருளாதாரம் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு தொடர்பான முக்கிய விடயங்கள் விவாதிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

முக்கியமாக, தென் ஆசியா மற்றும் மத்திய ஆசியா தொடர்பான விவகாரங்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அவர்களால் நியமிக்கப்பட்ட விசேட பிரதிநிதியுடன் ஜனாதிபதி நீண்ட நேர கலந்துரையாடலில் ஈடுபட்டார். இந்த பேச்சுவார்த்தைகள் பொருளாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்பு மேம்பாடு, முதலீட்டு வாய்ப்புகள் போன்ற துறைகளை மையமாகக் கொண்டு நடைபெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த சந்திப்பில் ஜனாதிபதி முன்வைத்த கோரிக்கைகள் அல்லது எட்டப்பட்ட உடன்பாடுகள் குறித்து அதிகாரப்பூர்வமாக முழுமையான விவரங்கள் வெளியிடப்படவில்லை. இருப்பினும் பொருளாதார எழுச்சி, கையிருப்பு வளங்கள் அதிகரிப்பு, முதலீடுகளை ஊக்குவித்தல், வரிவிதிப்புகளை குறைப்பது, ஏற்றுமதி-இறக்குமதி தொடர்பான விவாதங்கள் போன்றவை கலந்துரையாடப்பட்டிருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது.

மேலும், ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் உட்பட பல்வேறு நாடுகளின் தூதுவர்களையும் ஜனாதிபதி சந்தித்து நாட்டுக்கு தேவையான நன்மைகளை ஈர்க்கும் நோக்கில் பலதரப்பு பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளார்.

2026 பிப்ரவரி 18ஆம் தேதி பிற்பகலில் நடைபெற்ற அரச விருந்தில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கலந்து கொண்டதுடன், பல்வேறு நாடுகளின் தலைவர்களுடனும் அங்கு கருத்துப்பகிர்வு மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து பெப்ரவரி 19ஆம் தேதி நடைபெறும் AI Summit நிகழ்வில் ஜனாதிபதியின் அதிகாரப்பூர்வ உரை இடம்பெறவுள்ளது.

AI Summit நிகழ்வில் இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அவர்கள் பங்கேற்பது தொடர்பாக, அவர் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தில் நிபுணத்துவம் பெற்றவரா என்பது இப்பொழுது பொருட்டல்ல. இருப்பினும், தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் ஆலோசகர்களை உடன் கொண்டு இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளார். மாநாட்டில் அவர் வழங்கும் உரை இலங்கையின் AI சார்ந்த நிலைப்பாட்டை சர்வதேச அரங்கில் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை இந்த விஜயத்தின் பின்னணியில் சமாந்தரமாக இந்தியாவுடன் நடைபெறக்கூடிய திரைமறைவு இலங்கை-இந்திய அரசியல் பேச்சுவார்த்தைகள் பற்றியும் அரசியல் ஆய்வாளர்கள் கவனம் செலுத்துகின்றனர். இதற்கு முன் ரில்வின் சில்வா அவர்கள் இந்தியாவிற்கு விஜயம் செய்து பல்வேறு அரசியல் தலைவர்களையும் சந்தித்திருந்தார். அப்போது மாகாண சபை அமைப்பு தொடர்பான விவாதங்கள் இடம்பெற்றதாகவும் கூறப்பட்டது.



தற்போது, மாநாட்டின் பெயரில் நடைபெற்றாலும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோருடன் ஜனாதிபதி நடத்திய சந்திப்புகளில் மாகாண சபை தேர்தல் நடத்துதல் தொடர்பான தமிழ் அரசியல் பிரதிநிதிகளின் கோரிக்கைகள் திரைமறைவில் பேசப்படக்கூடும் என்ற மதிப்பீடுகள் உள்ளன. மேலும், அதிகாரப் பரவலாக்கம் (Devolution Of Power) தொடர்பான விவாதங்களும் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சூழலில், இந்திய அரசாங்கம் முன்வைத்த தமிழர் பிரச்சினைக்கான ஆரம்ப தீர்வாக கருதப்படும் 13ஆம் திருத்தச் சட்டம் மீண்டும் அரசியல் விவாதங்களில் முக்கிய இடத்தைப் பெறக்கூடும். குறிப்பாக, காணி மற்றும் போலீஸ் அதிகாரங்களுடன் வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் தொடர்பான விவகாரங்கள் மீண்டும் முன்வைக்கப்படலாம் என அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

முன்னதாக இந்தியா கொண்டுவந்த 13ஆம் திருத்தத்திற்கு எதிரான நிலைப்பாடு எடுத்ததும் அதிலுள்ள "வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகம்" (Tamils Home Land) என்பதை எதிர்த்து போராட்டங்கள், நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் வடக்கு கிழக்கை பிரித்த தரப்பாக JVPஇருந்தது. மற்றும் பல்வேறு படி நிலைகளில் சுனாமி இடைகால வரைபு, விடுதலைப் புலிகள் - இலங்கை அரசுடனான சமாதான உடன்படிக்கைகள் என்பவற்றுக்கு எதிராகவும் போராட்டங்கள், ஆர்பாட்டங்கள், உண்ணாவிரதங்கள் என பல்வேறு அரசியல் முயற்சிகளில் ஈடுபட்டு தமிழ் விரோத இந்திய விரோத நிலைபாடுடையதாக பார்க்கப்பட்ட JVP கட்சியினரே தற்போது இந்தியாவுடன் ராஜதந்திர உறவுகளில் கலந்துரையாடலில் ஈடுபடுவது அரசியல் அரங்கில்நிகழ்ந்தவோர் அதிசயமாகவே பார்க்கப்படுகிறது. ஒரு முக்கிய மாற்றமாக பார்க்கப்படுகிறது.



இந்த மாற்றம் இந்தியாவை விமர்சித்த மற்றும் இந்தியா முன்னெடுத்த தமிழர் தீர்வு நலத் திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்ததாக முன்பு அதிதீவிரமாக செயல்பட்டிருந்த ஜேவிபி (JVP) அணிகள், தற்போது இந்தியாவுடன் நேரடி ராஜதந்திர உறவுகளில் ஈடுபடுவது குறிப்பிடத்தக்க மாற்றமாக கருதப்படுகிறது. இதுதான் "அரசியல் அதிசயம்" என்பது.

முன்னர் இலங்கையில் குறைந்த நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கொண்ட சிறிய அரசியல் இயக்கமாக இருந்த ஜேவிபி, இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் பின்னணியில் மக்கள் ஆதரவின் மூலம் விரைவான அரசியல் வளர்ச்சியை அடைந்திருக்கிறது. அந்நேரத்தில் பிராந்திய வல்லரசுகளின் தாக்கத்தை விட மக்கள் ஆணை முக்கியமானதாகவே இருந்தது என கருதலாம். மக்கள் ஆணை வழி வந்த அரசை அரவணைத்து போவதும் இந்தியாவிற்கு தேவையாக இருந்தது.

குறிப்பாக ரில்வின் சில்வா மற்றும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தற்போது இந்தியாவில் அரசியல் மற்றும் ராஜதந்திர பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது புதிய பரிமாணமாக பார்க்கப்படுகிறது.

இந்த நிலைமையில் தமிழ் அரசியல் தரப்பின் அரடியல் இராஜதந்திர வளர்ச்சி குறைவு குறித்து நாம் தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகின்றோம். தமிழர் அரசியல் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் மாகாண சபை தேர்தல் நடத்துவது, அதிகாரப் பரவலாக்கம், மற்றும் வடக்கு-கிழக்கு இணைப்பு போன்ற விடயங்கள் அனுர-மோடி- ஜெய்சங்கர் திரைமறைவு பேச்சுவார்த்தைகளில் விவாதிக்கப்பட்டிருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது.

13ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் வடக்கு-கிழக்கு இணைப்பை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமெனக் கோரப்பட்டாலும் முன்னர் அதற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொண்ட அரசியல் அணிகள் இப்போது அதனை எவ்வாறு அணுகும் என்பது தெளிவாக இல்லை என அப்பட்டமாக தெரிகிறது.

இந்த சமாந்தர நிலையில் இங்கோ தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் தங்கள் கட்சிகளுக்குள்ளே பல்வேறுபட்ட பிரிவுகள் மற்றும் முரண்பாடுகளால் பலவீனமடைந்து, பரிதாப நிலையில் உள்ள சேடமிழுக்கும் நிலையிலேயே இருக்கிறது. அதனால் தமிழர் அரசியல் முன்னேற்றத்தில் சவால்கள் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழர் அரசிசியல் படுத்து போனதால் வடக்கு-கிழக்கு பிராந்தியங்களில் பல்வேறு அரச அரசியல் கட்சிகள் ஊடுருவி செயற்பட்டு வரும் நிலமை அதிகரித்துள்ளது.

ஜேவிபி கட்சியின் அரசியல் தலைவர்கள், தற்போது இந்தியாவில் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்களுடன் நேரடி பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது அவர்களின் ராஜதந்திர அணுகுமுறையில் ஏற்பட்ட மாற்றத்தையும் அரசியல் வெற்றியாகவும் கருதலாம் தமிழ் அரசியல் வட்டாரங்களில் "ஒற்றுமை" என்ற கோஷம் தொடர்ந்து முன்வைக்கப்பட்டாலும் கட்சிகளுக்குள் உள்ள முரண்பாடுகள், உள்நாட்டு போட்டிகள் மற்றும் பரஸ்பர அரசியல் விமர்சனங்கள், குழிபறிப்புக்கள் காரணமாக தமிழ் தேசிய அரசியல் மிக மோசமாக பலவீனமடைந்துள்ளது.

குறிப்பாக, கட்சிகளுக்குள் ஏற்பட்ட இழுபறி நிலைகள் மற்றும் பிற தமிழ் தேசிய அணிகளுடன் அணிசேரா தீண்டத்தகாத அரசியல் நிலைப்பாடுகள் மேலோங்கியதன் விளைவாக தமிழ் தேசிய அரசியல் இப்போது மக்கள் மயப்பட்ட அரசியல் அல்லாமல் தனிநபர் மைய அரசியலாக மாறியுள்ளதன் விளைவுகளே இந்த வீழ்ச்சிக்கு காரணம்.

(தொடர்ச்சி 22 பக்கம்)

*(16கம் தொடர்ச்சி)*

## திருமணம், சோதிடம், கோள் பயம் – அறிவியல் பார்வையில் ஒரு விளக்கம்

இதிலிருந்து விடுபட, பரிகாரங்கள் தேவையில்லை. தேவைப்படுவது தர்க்க சிந்தனையும் செயல்பாடும். மனிதன் செயல்படும் இடத்தில், கோள் பயம் நிலைக்க முடியாது.

---

**திருமணமும் சாதகப் பொருத்தமும் - அறிவீனமா?**

திருமணம் வெற்றி பெறுவது பல மனித காரணிகளின் கூட்டுத் தொகை:

- உரையாடல் திறன்
- ஒருவருக்கு ஒருவர் மரியாதை
- ஒரே மதிப்பீடுகள் (values)
- பொருளாதாரப் புரிதல்
- மன-உடல் நலம்

எந்த அம்சத்தையும் சாதகப் பொருத்தம் அளவிடுவதில்லை. 10 பொருத்தம், 8 பொருத்தம் போன்ற எண்கள்:

- அறிவியல் அளவீடுகள் அல்ல
- ஆய்வுகளால் எண்பிக்கப்படாதவை
- மனிதர்களை எண்களாகக் குறைக்கும் அபாயகரமான நடைமுறை

**இதன் சமூக விளைவுகள் கடுமையானவை:**

- பொருத்தம் உள்ள ஆண் - பெண் "பொருத்தம் இல்லை" என்ற ஒரே காரணத்தால் நிராகரிக்கப்படுகிறார்கள்
- வன்முறை, பொருந்தாத மனநிலை உள்ள திருமணங்கள் "பொருத்தம் இருக்கு" என்ற பெயரில் தொடர்கின்றன
- திருமணத் தோல்விக்கு பிறகு சாதகம் ஒரு வசதியான குற்றவாளியாக மாற்றப்படுகிறது

---

**அறிவுள்ள மாற்று என்ன?**

சாதகப் பொருத்தத்துக்கு மாற்றாக, திருமணத்திற்கு முன் கேட்க வேண்டிய கேள்விகள்:

- வாழ்க்கை இலக்குகள் ஒத்திருக்கிறதா?
- பணம், சேமிப்பு, கடன் பற்றிய பார்வை என்ன?
- கோபம், மோதலை எப்படிக் கையாள்கிறார்கள்?
- பாலின சமத்துவம், மரியாதை இருக்கிறதா?
- குடும்ப எல்லைகள் (boundaries) தெளிவாக உள்ளதா?

இவையே உண்மையான, நடைமுறையில் வேலை செய்யும் "பொருத்தங்கள்". இவை எந்த சாதகத்திலும் இல்லை; ஆனால் திருமண வாழ்க்கையில் மிக முக்கியமானவை.

---

**சமூக அதிகாரமும் சோதிடமும்**

சோதிடம் ஒரு தனிப்பட்ட நம்பிக்கை மட்டுமல்ல் அது சமூக அதிகாரத்தின் ஒரு கருவியாகவும் செயல்படுகிறது. குடும்பத்தில் மூத்தவர்கள், சமூகத்தில் மதிப்பு பெற்றவர்கள், அல்லது "அறிந்தவர்கள்" என்ற பெயரில் சிலர், சோதிடத்தை வைத்து பிறரின் வாழ்க்கை முடிவுகளை கட்டுப் படுத்துகிறார்கள்.

**பெண்கள் மீது சோதிடத்தின் தாக்கம்**

சாதகப் பொருத்தமும் தோஷக் கதைகளும் அதிகமாக பாதிப்பது பெண்களைத்தான்.

- "செவ்வாய் தோஷம்" என்ற பெயரில் பெண்கள் நிராகரிக்கப்படுதல்
- வயது அதிகரிக்கும்போது "ஜாதகம் காரணம்" என்ற பழி
- தோல்வியடைந்த திருமணங்களில் குற்றம் பெண்மீது தள்ளப்படுதல்

இவை அனைத்தும் அறிவியல் சிக்கல்கள் அல்ல; பாலின சமத்துவமின்மையின் வெளிப்பாடுகள்.

---

**சட்டமும் பொது வாழ்வும் - சோதிடத்தின் இடம்**

நவீன சனநாயக சமூகத்தில்:

- சட்டங்கள் சான்றுகளின் அடிப்படையில் இயங்குகின்றன
- மருத்துவம் அறிவியல் சோதனைகளின் அடிப்படையில் வளர்கிறது
- கல்வி தர்க்கத்தின் அடிப்படையில் கட்டமைக்கப் படுகிறது

இந்த அமைப்புகளில் எங்கும் சோதிடம் அதிகாரப்பூர்வ தீர்மானக் கருவியாக இல்லை. ஆனால் தனிப்பட்ட வாழ்க்கையில் மட்டும், குறிப்பாக திருமணத்தில், அது முழு அதிகாரம் பெற்றது போல நடக்கிறது. இந்த முரண்பாடே சோதிடத்தின் அறிவியல் தட்டுப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

---

**ஏன் இவ்வளவு காலம் சோதிடம்திடம் நீடிக்கிறது?**

சோதிடம் உண்மை என்பதால் அல்ல; அது சில தேவைகளை நிறைவு செய்வதால் நீடிக்கிறது:

- உளவியல் (மனத் திருப்தி அல்லது நிம்மதி)
- பொறுப்பிலிருந்து தப்பிக்கும் வழி
- சமூக ஒப்புதல்
- உறுதியற்ற வாழ்க்கைக்கு ஒரு எளிய கதை

அறிவியல் சிந்தனை கடினமானது; அது கேள்விகள் கேட்கச் சொல்கிறது. சோதிடம் எளிதானது; அது பதில்கள் தருவதாக நடித்துக்கொள்கிறது.

---

**அறிவியல் சிந்தனை - மாற்று பாதை**

சோதிடம்திடத்தை மறுப்பது மட்டுமே போதாது. அதற்குப் பதிலாக வளர்க்க வேண்டியது அறிவியல் சிந்தனை:

- சான்று கேட்கும் பழக்கம்
- காரண-விளைவு தொடர்பைத் தேடும் மனநிலை
- "நடந்ததால் உண்மை" என்ற தவறான தர்க்கத்தை நிராகரித்தல்

இந்த சிந்தனை வளர்ந்தால், சோதிடம்திடம் தானாகவே தனது அதிகாரத்தை இழக்கும்.

---

**விரிவான முடிவு**

சோதிடம்திடம், சனி-ராகு, சாதகப் பொருத்தம் ஆகியவை மனித வாழ்க்கையின் இயல்பான சிக்கல்களுக்கு கொடுக்கப்பட்ட சமூக விளக்கங்கள். அவை அறிவியல் உண்மைகள் அல்ல; ஆனால் சமூக அடிப்படையில் சக்திவாய்ந்த நம்பிக்கைகள்.

திருமணம் என்பது கோள்களின் சேர்க்கை அல்ல; அது ஆண் - பெண் இருவருக்கும் இடையிலான வாழ்க்கை உடன்படிக்கை. அந்த உடன்படிக்கை வெற்றி பெறுவது சாதகத்தால் அல்ல; உரையாடல், சமத்துவம், பொறுப்பு, அன்பு, மனப் பொருத்தம் ஆகியவற்றால்.

மனிதன் கோள்களின் கைதி அல்ல. அவன் எடுக்கும் முடிவுகளுக்கு அவனே பொறுப்பு. ஆண் - பெண் இருபாலாரிடத்தில் ஒத்த கல்வி, ஒத்த வேலை, ஒத்த திரு, ஒத்த தோற்றம், ஒத்த குடிப்பிறப்பு (சாதி அல்ல) ஒழுக்கம் இருந்தால் தாராளமாக திருமணத்தை செய்து வைக்கலாம். சோத-டப் பொருத்தங்களை பார்த்து சோதிடர் திருமணப் பொருத்தம் இல்லை என்பதை நம்பி ஆண் - பெண் திருமணங்களை அருள்கூர்ந்து தள்ளிவிட வேண்டாம். அல்லது நிறுத்திவிட வேண்டாம்.

சாதகம் பார்க்காது செய்த திருமணங்கள் வெற்றி பெற்றுள்ளன. சாதகம் பார்த்து செய்து திருமணங்கள் தோல்வியில் முடிவடைந்துள்ளன. அதாவது திருமணங்களின் வெற்றி, தோல்விக்கு சாதகப் பொருத்தம் காரணம் அல்ல.

---

## தவக்காலம்

தவக்காலம் நம்மை ஒதுக்கும் காலம் அல்ல;
ஒதுக்கப்பட்டவர்களை நினைக்கும் காலம்.
தவக்காலம் உபவாசிக்கும் காலம் மட்டுமல்ல;
உணவில்லாதவர்களை உபசரிக்கும் காலம்.
தவக்காலம் பிறரை திருத்தும் காலம் அல்ல;
தன் குறையை ஆழமாய் உணரும் காலம்.
தவக்காலம் அமைதியாயிருக்கும் காலம் அல்ல;
இறைவனோடு அதிகமாய் உரையாடும் காலம்.
தவக்காலம் முடங்கி கிடக்கும் காலம் அல்ல;
தோய்ந்த இறைப்பணியை முடுக்கி விடும் காலம்.
தவக்காலம் தீயவற்றை விடும் காலம் மட்டுமல்ல;
நற்செயல்களுக்காக திறமைகளை வளர்க்கும் காலம்.
தவக்காலம் மக்களிடமிருந்து பிரியும் காலம் அல்ல;
மக்களோடு ஒப்புரவாகும் காலம்.
தவக்காலம் இயேசுவின் சிலுவையருகே சுற்றும் காலம் அல்ல;
நம் சிலுவையை எடுத்துக் கொண்டு புறப்படும் காலம்.
தவக்காலம்
இயேசுவின் மரணத்திற்காய் வருந்தும் காலம் மட்டுமல்ல;
அந்த மரணத்திற்கு காரணம் என் பாவம் என்பதை
உணரும் காலம்.
தவக்காலம் வெறும் 40 நாள் பயணமல்ல;
இறைவன் நமக்கு கொடுத்த நாள் முடியும் வரையிலும்

## வீணாவின் கவிக்கணை

கண்கள் காணும் காட்சிகள்
அனைத்துமே உண்மை
ஆவதில்லை,
பொய்கள் கூட சிலநேரம்
மெய்போல் தெரியக்கூடும்,
அதை பிரித்து உணர்ந்திடும்
பக்குவத்தை நாம் நன்கு
வளர்த்திட வேண்டும்.

# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும்
1184



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## கருமாரி அம்மன் ஆலயம்
### புத்தளம்

புத்தளம் கருமாரி அம்மன் ஆலயம், புத்தளம் மணற்குன்றின் எல்லையில், தம்மன்அடவி என்னும் கிராமத்திலே காணப்படுகின்றது. இக்கோயில் ஏறக்குறைய நூற்றி ஐம்பது ஆண்டுகட்கு முற்பட்ட பழமையுடையதாக விளங்குகின்றது. கருமாரி அம்மனின் அடையாளங்களாக தலவிருட்சம், பாம்புப்புற்று, நாகபாம்பு என்பன கூறப்பட்டுள்ளன. புத்தளம் கருடதரிஅம்மன்கோயிலிலும் இவ்வாறான அமைப்புக்கள் காணப்படுகின்றன. இவ்வாலயத்தின் தலவிருட்சமாக ஆலமரம் காணப்படுகின்றது. இந்த ஆலமரத்தின் அடியிலே காணப்படுகின்ற புற்றும், அதனைக் காவல் செய்யும் பாம்புமே இவ்வாலயத்தின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளன. இவை அனைத்தும் தான்தோன்றியாகக் காணப்படுவதால், இக்கோயிலில் எழுந்தருளியுள்ள அம்மையை தான்தோன்றீஸ்வரி எனவும் அழைக்கும் வழக்குக் காணப்படுகின்றது.

இப்பிரதேசத்திலே வாழ்ந்தோரில் பலர் காடுகளிலும், வயல்களிலும் வேலை செய்வோராகக் காணப்பட்டனர். இவ்வாறான மக்கள் தொழில்புரியச் செல்லும்பொழுது, ஆலமரத்திற்கு அண்மையிலுள்ள மரங்களின் குழைகளை ஒடித்து, தமக்கு எந்தவித துன்பமும் நேராமல் காத்தருள வேண்டும் என்று பிரார்த்தித்து, மரத்தடியில் இருந்த பாம்புப் புற்றின்மீதும், ஆலம்வேர்களுக்கிடையிலும் அவற்றை வைத்து வழிபாடியற்றிச் செல்வது வழக்கம்.

தம்மன் அடவியில் எழுந்தருளியுள்ள கருமாரி அம்மனை வழிபட்டு, சகல வளங்களையும் பெற்றவர்களுள் பொம்மக்கா என்பவர் குறிப்பிடத்தக்கவர். ஆயினும் ஒரு காலகட்டத்தில் பொம்மக்கா நாகதோஷத்தால் பீடிக்கப்பட்டு பல இன்னல்களுக்கு உள்ளானார். தன்னைப் பிடித்துள்ள நாகதோஷம் நீங்கவேண்டும் என்ற வேண்டுதலோடு, தினமும் புத்தளம் சேனைக்குடியிருப்பிலே கோயில் கொண்டிருந்த, பத்தினி அம்மனை வழிபட்டு வந்தார்.

வழமைபோல பத்தினி அம்மன் கோயிலுக்குச் செல்லுமுன், பத்தினி அம்மன் கோயிலுக்கு அருகிலுள்ள வில்லுக்குளத்தில் நீராடிக் கொண்டிருந்தார். அப்பொழுது பொம்மக்கா முன் தோன்றிய மூதாட்டியொருவர், உன்னுடைய நாகதோஷம் நீங்க வழிகாட்டுகின்றேன், நான் வணங்கும் கோயிலுக்கு என்னுடன் வா என அழைத்தார். ஆர்வமிகுதியால் எப்படியாவது நாகதோஷத்திலிருந்து விடுவடவேண்டும் என்ற ஆவலோடு மூதாட்டியைப் பின்தொடர்ந்தார்.

காட்டுவழியே அழைத்துச் சென்ற மூதாட்டி, தம்மன் அடவி ஆலய தலவிருட்சத்திற்கு அண்மையில் சென்றதும் திடீரென மறைந்துவிட்டார். அந்தக் கணத்திலேயே தன் உடம்பிலே ஏதோவொரு மாறுதல் ஏற்பட்டதை உணாந்த பொம்மக்கா ஆச்சரியமடைந்தார். தான் நாகதோஷத்திலிருந்து விடுபட்டதை உணர்ந்த பொம்மக்கா, நடந்தவற்றை ஊரவர்களிடம் மகிழ்ச்சியோடு தெரிவித்தார். அத்தோடு அமையாது ஊரவர்களின் உதவியோடு, கருமாரி அம்மன் ஆலயத்திற்கு அருகிலே திருமடம் ஒன்றினை அமைத்து அங்கேயே தங்கினார்.

மடத்தில் தங்கியவாறே மண், மற்றும் ஓலைகளைக்கொண்டு அம்மனுக்குக் கோயில் கட்டினார். இக்கோயிலிலே சக்தி யந்திரத்தைப் பிரதிஷ்டை செய்ய எண்ணங் கொண்டார். பொம்மக்காவின் முயற்சியின் பயனாக, காசியில் இருந்து சக்தி யந்திரத்தைத் தருவித்து, அதனை கருமாரிஅம்மன் கோயிலிலே பிரதிஷ்டை செய்து, பயபக்தியோடு பூசித்து வந்தார். பொம்மக்காவின் வழிபாட்டுமுறையிலே தியானமே முக்கியமாகக் காணப்பட்டது. இவ்வாறான நிலையிலே கருமாரி அம்மன் ஆலயத்திலே பொம்மக்கா சமாதியடைந்தார். இந்நிகழ்வின் பின் இக்கோயிலின் அருளும் மகத்துவமும் எங்கும் பரவியது. இக்காரணத்தினால் இவ்வூர் மக்கள் கருமாரி அம்மனை பொம்மக்கா அம்மன் எனப் போற்றினர்.

கருமாரிஅம்மன் கோயிலுக்குரிய தலவிருட்சமான ஆலமரத்தை புனிதமானதாகப் போற்றி வணங்குகின்றனர். இக்காரணத்தினால் இவ்விருட்சத்தைத் தீண்டாது, அயலே நின்று வழிபாடியற்றிச் செல்கின்றனர். அம்மனுக்குரிய சிறப்பான நாட்களாகிய செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் நெய்விளக்கேற்றி பொங்கல்வைத்து சிறப்பான வழிபாடுகளை மேற்கொண்டனர்.

இவ்வாறான நிலையில் ஒவ்வொரு நாகசதுர்த்தி தினத்தன்றும் ஒரு அதிசயம் நிகழ்ந்தது. ஆலமரப்புற்றிலிருந்து வெண்மைநிறமுடைய நாகபாம்பு வெளியே வந்து மக்களுக்குக் காட்சி கொடுத்துச் சென்றது. நாக தரிசனத்தை மக்கள் பயபக்தியோடு ஏற்றதோடு இக்காட்சியைக் காண்போருக்கு சகல நலன்களும் கிடைக்கும் எனவும் நம்பி வழிபட்டு வந்தனர். இக்காட்சியைக் காண நாகசதுர்த்தி நாளில் இக்கோயிலுக்கு ஏராளமான பக்தர்கள் வந்து தரிசித்துச் செல்வது வழக்கமாகக் காணப்பட்டது.

வெண்ணிற நாகத்தோடு வேறு இரு பாம்புகளும் கருமாரி அம்மன் கோயில் சுற்றாடலிலே, சர்வ சுதந்திரத்தோடு சுற்றிதிரிவதாக இவ்வூரவர்கள் கூறியுள்ளார்கள். இப்பாம்புகள் எவருக்கும் தீங்கிழைப்பது கிடையாது. இப்பாம்புகள், தாம் ஏற்றிப்போற்றும் கருமாரிஅம்மனுடையவை என்றும், அவற்றிற்கு இடையூறு செய்யக்கூடாது என்றும், இவ்வூரவர்கள் இக்கோயிலுக்கு வரும் ஏனையோரிடமும் கூறுவர். இப்பாம்புகளைத் தரிசிப்பது கருமாரியம்மனைத் தரிசித்தமைக்குச் சமமானது என்ற எண்ணத்தை அனைவரும் கொண்டுள்ளனர். தாயின் கருணைக்கு எல்லையேது என்பதற்கமைய, புத்தளம் மணற்குன்றின் எல்லையிலே தம்மன் அடவியில் எழுந்தருளியுள்ள கருமாரி அம்மனும், தன்மீது ஆராத பக்திகொண்ட மக்களை கண்ணே போலக் காத்துவருகின்றாள்.

**வளரும்..**

*(15 பக்கம் தொடர்ச்சி)*

## முன்னாள்–இன்னாள் எம்.பி.க்களுக்கு அநுரகுமார அரசு வைத்த “ஆப்பு”

தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்ற ஓய்வூதியச் சட்டத்தினைநீக்குவதற்கான சட்டமூலம் கடந்த ஜனவரி மாதம் நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்காரவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இச்சட்ட மூலத்திற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டிருந்த நிலையில் இச்சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானதாக இல்லையென்பதால் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதற்கு அமைய குறித்த சட்டமூலம் ஆளுகை நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார்மேற்பார்வைக் குழுவில் கடந்த 11 ஆம் திகதி புதன்கிழமை அங்கீகரிக்கப்பட்டது. இந்த அங்கீகாரத்தையடுத்தே கடந்த 17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. குறித்த சட்டமூலம்பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அதேதினம் சபாநாயகரினால் சான்றுரைக்கப்பட்டதிலிருந்து பாராளுமன்றஉறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் இரத்துச் செய்யப்படும் விடயத்தில் மாற்றுக் கருத்துக்களும் முன்வைக்கப்படுகின்றன. மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இருக்கின்றனர் என்றும் பலர் இந்த ஓய்வூதியத்தை நம்பி தமது வாழ்க்கையைக் கொண்டு செல்வதாகவும்சிலர் வாதங்களை முன்வைக்கின்றனர். எனினும் அரசியல் என்பது மக்களுக்காக அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளப்படும் சேவை. அவர்கள் உறுப்பினர்களாக இருக்கும்போது அதற்கான செலவீனங்கள் செய்யப்பட்டாலும் ஓய்வுபெற்ற பின்னர் அவர்களிடமிருந்து மக்களுக்கு எவ்வித சேவையும் கிடைப்பதில்லை. அது மாத்திரமன்றி அவர்கள் உயிரிழந்த பின்னர் அவர்களின் துணைகளுக்கும் ஓய்வூதியம் வழங்குவது தேவையற்ற செலவீனம். பொருளாதார ரீதியில் நாடு பின்தள்ளப்படுவதற்குக் காரணமான வீண்விரயங்கள் நிறுத்தப்பட்டு சரியான பாதையில் நாட்டை முன்கொண்டு செல்ல வேண்டும். அதற்காக இத்தகைய நடவடிக்கைகள் தேவை என அரசாங்கத்தினால் நியாயம் கற்பிக்கப்படுகின்றது.

எனினும் தற்போதைய அரசாங்கமான ஜே.வி.பி.-தேசியமக்கள் சக்திக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை என்பது மிகவும் சொற்ப அளவில் தான் இருக்கின்றது. சந்திரிகா அரசில் மட்டுமே ஜே.வி.பி.யை சேர்ந்த 36 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்த நிலையில் அதற்கு பின்னரான பாராளுமன்றத்தில் இவர்களை பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 5 ஐ தாண்டவில்லை. தற்போதைய பாராளுமன்றத்தில்தான் இவர்கள் ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி என்றவகையில் 159 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ளனர். அத்துடன் தற்போதைய பாராளுமன்றத்தில்லுள்ள 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 168 பாராளுமன்ற உறுப்பினர்கள் புதிய முகங்கள் என்பதால் இவர்களுக்கு ஓய்வூதியம் நிறுத்தத்தினால் எந்தவித பாதிப்புகளும் இல்லை. எனவே இந்த ஓய்வூதிய நிறுத்தத்தினால் ஏனைய அரசியல் கட்சிகளின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களே பாரியளவில் பாதிக்கப்படவுள்ளதால் இது அநுரகுமார அரசாங்கத்தின் ஒரு அரசியல் பழிவாங்கல் என்ற குற்றச்சாட்டுக்களையும் நிராகரித்து விட முடியாது.




# இவ்வார ராசிபலன்

**20-02-2026 வெள்ளி தொடக்கம் 26-02-2026 வியாழன் வரையும்**




**மேஷம்:** நீண்ட நாளைய கனவு நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் தொல்லை உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. கட்டிடத் தொழில் லாபம் தரும். கல்வியில் ஆர்வம் கூடும். வருமானம் வரும். புதிய நட்பு உருவாகும். பழைய கடன் தீரும். குதூகலம் கூடும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். பணிவும், துணிவும் கூடும். உற்சாகம் அலைமோதும். இடமாற்றம் உண்டு. தொழில் மேன்மை உண்டு. பயணத்தடை ஏற்படும். வேலை வாய்ப்புக் கூடும். ஆலோசனை பலன் தரும். அணிகலன் தரும். பணப்பிரச்சனை தீரும். புதிய எண்ணம் நிறைவேறும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பதவி வாய்ப்பு வரும். முயற்சிகள் பலன் தரும். பொன், பொருள் சேரும். விருப்பங்கள் நிறைவேறும். வருத்தங்கள் மறையும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். முயற்சிகள் வெற்றி தரும். பெருமைகள் உயரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். பொறியியல் துறை லாபம் தரும். தோற்றப் பொலிவு கூடும். எதிரிகள் பலம் குறையும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். நட்பு வட்டம் விரிவடையும். இரகசியம் காப்பது நல்லது. அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். பங்குச்சந்தையில் லாபம் பெருகும். நீண்ட தூரப்பயணம் லாபம் தரும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோகப் பலன் கூடும். பணப்புழக்கம் சரளமாகும். பகை மறையும். கணவன், மனைவி உறவு தித்திக்கும்.

அதிர்ஷ்ட எண்: 1,4,6,2, அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,E




**ரிஷபம்:** உத்தியோக வாய்ப்புகள் கிட்டும். கையிருப்பு கரையும். வாகனச்செலவு ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். பழைய கடன் வசூலாகும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். திறமையால் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத்தொழிலில் நிலை உயரும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். கண் நோய் வந்து போகும். திடீர் திருப்பம் ஏற்படும். கன்னிப்பெண்களிடம் கவனம் தேவை. புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். வெறுப்புகள் அகலும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். உத்தியோக உயர்வு கிட்டும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். பெரிய வாயப்புகள் தேடி வரும். பணியில் ஆர்வம் ஏற்படும். கடன்சுமை குறையும். விருப்பமான தொழில் அமையும். குடும்ப பாசம் அதிகரிக்கும். தனலாபம் கூடும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். மற்றவரிடத்தில் மரியாதை உயரும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பெரியோர்களை அனுசரித்து செல்வது நல்லது. வழக்கு முடிவுக்கு வரும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க வேண்டும். தன்னம்பிக்கை துளிர்விடும்.

அதிர்ஷ் எண்: 3,5,9,8, அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,S




**மிதுனம்:** தங்க நகைகள் சேரும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. ஆபரணச்சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. மாணவர்கள் கல்வியில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். பழையக்கடன் வசூலாகும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். நட்டமில்லாமல் திட்டங்கள் நிறைவேறும். குடும்பத்தில் குழப்பம் நீங்கும். புத்திரர் வகையில் சந்தோஷம் கூடும். பெருமைகள் கூடும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து போகும். பொருளாதாரம் உயரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர தொடர்பு லாபம் தரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் நற்பெயர் கிடைக்கும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப்போடுங்கள். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. மனதில் மகிழ்ச்சி கூடும். புத்தி சாதுர்யம் கூடும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். சிக்கனம் தேவை.

அதிர்ஷ்ட எண்: 2,4,9,1, அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,Z




**கடகம்:** நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன்கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். புதிய முயற்சியில் கவனம் தேவை. மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். தொழில் லாபம் தரும். பதவி உயர்வு தடைப்படும். நீண்ட நாளைய பிரச்சினை முடிவுக்கு வரும். வியாபாரத்தில் கவனம் தேவை. பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் அதிகரிக்கும். உடல் நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளின் தொல்லைகள் ஒழியும். பணவரவு சுமாராக இருக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. நவகிரஹ அனுகிரஹம் கூடும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கைக்கூடும். இல்லத்தில் அமைதி கூடும். வார்த்தைகளில் நிதானம் தேவை. காதல் கைக்கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். தொட்ட காரியம் ஜெயமாகும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். இனம் புரியா சந்தோஷம் குடிகொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். பொது வாழ்வில் புகழ் கூடும். திருமண முயற்சி பலன் தரும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். எதிரிகள் விலகி செல்வார்கள். கால்நடைகளால் லாபம் கிட்டும். புதிய நண்பர்களை சந்திப்பீர்கள். அரசு வழியில் கவனம் தேவை.

அதிர்ஷ்ட எண்: 7,3,0,2, அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,E




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**சிம்மம்:** லஷ்மி கடாட்ஷம் பெருகும். ஆடை, அணிகலன் சேரும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பொறியியல் துறை லாபம் தரும். மாணவர் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்பு கூடி வரும். மன அமைதி குறையும். உடல்நலம் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும். பொருளாதாரம் உயரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேலைபளு அதிகரிக்கும். உதவிகள் கிட்டும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். நல்லோர்களின் பாராட்டு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். உண்மைகள் வெளிப்படும். பூமி வாங்கும் யோகம் உண்டு. பெண்களுக்கு சுபசெய்தி வரும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். ஆடை, அணிகலன்கள் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கைத் தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. மருத்துவச் செலவு குறையும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். கோதுமை தானம் குல விருத்தி சேரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. சாதனையான காலம். எதார்த்தமாக செயல்படவும். பக்குவமான பேச்சு பயன் தரும்.

அதிர்ஷ்ட எண்: 2,8,3,5, அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,C




**கன்னி:** அலைச்சல் அதிகரிக்கும். கலைத்தொழில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலை அமையும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சினை முடிவுக்கு வரும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். நண்பர்கள் உதவி கிடைக்கும். புதிய முதலீடு லாபம் தரும். வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். பணவரவு உண்டு. கமிஷன் தொழிலில் லாபம் தரும். பயணத்தால் லாபம் கூடும். பேச்சில் நிதானம் தேவை. பிள்ளைகளால் பலன் உண்டு. ஆலோசனைகள் பலன் தரும். காதல் கைக்கூடும். விவசாயிகள் பயன் பெறும் காலம். வாகன செலவு ஏற்படும். விருந்தினர்கள் வருகை உண்டு. பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். உடல்நலனில் அக்கறை தேவை. அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவு ஏற்படும். நன்மைகள் அதிகமாகும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். பாராட்டுக்கள் அதிகமாகும். வெற்றிகள் குவியும். ஆண்கள் அதிகாரம் உயரும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடவும். விளையாட்டுத் துறையில் கவனம் தேவை. வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்.

அதிர்ஷ்ட எண்: 2,3,7,9, அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,U




**துலாம்:** வினோதமான எண்ணம் பூர்த்தியாகும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். வெளிவட்டார பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். சாமார்த்தியமாக செயல்படுவீர். தாய்ப்பாசம் அதிகரிக்கும். பாகப்பிரிவினை ஏற்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மாணவர்களுக்கு படிப்பில் எச்சரிக்கை தேவை. வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். ஊக்கம் அதிகரிக்கும். சேமிப்பு உயரும். புதுமைகள் நிறைந்த காலம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். ஆபரணச் சேர்க்கை உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அந்நிய தேசப்பயணம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். விறுவிறுப்பான காலம். உடல்பொலிவு கூடும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டும். எடுத்த முயற்சி வெற்றி பெறும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும்.

அதிர்ஷ்ட எண்: 7,4,5,2, அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,I




**விருச்சிகம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். ஆரோக்கியம் சீராகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கலைகளில் ஆர்வம் கூடும். மனைவி அன்பு அதிகரிக்கும். புது முயற்சிகள் பலன் அளிக்கும். மருத்துவச் செலவு குறையும். பேச்சில் நிதானம் தேவை. விரயங்கள் கூடும். பயணங்களால் பலன் தரும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். உத்தியோக உயர்வு உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். பொருளாதாரம் உயரும். கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும்.

(தொடர்ச்சி 22 பக்கம்)

# பிரித்தானிய துணைப் பிரதமர் லம்மியின் இன சமத்துவ அரசியலை உங்கள் வர்க்க அரசியலுடன் இணைத்தால், இலங்கை சிங்கப்பூராகிவிடும் அல்லவா?

உலக செய்திகள் World News

## தோழர் அநுர குமார திஸ்ஸநாயக்காவுக்கு நடராஜா குருபரன் அவர்களின் ஒரு திறந்த அரசியல் மடல்!



அந்தரத்தில் வந்த எனக்கு தஞ்சமளித்து, குடியுரிமை வழங்கி வாழ்வளித்த பிரித்தானியாவின் துணைப் பிரதமர் David Lammy இன்று (17.02.2026) நான் பிறந்து வளர்ந்த இலங்கைக்கு வருகை தந்திருக்கிறார். ஜனாதிபதி செயலகத்தில் நீங்கள் அவரின் கைகளை பற்றிய அந்த தருணத்தை, வெறும் இரு அரசியல் வாதிகளின் மரியாதைக்கான கைலாகுவாக அல்லாமல், இரண்டு அரசியல் அனுபவங்களின் சந்திப்பாக நான் உணர்ந்தேன்.

லண்டனின் புறநகர் வறுமைக் குடியிருப்பு ஒன்றில் இருந்து எழுந்த லம்மி, கருப்பின மற்றும் சிறுபான்மை மக்களின் ஒடுக்கப்பட்ட அனுபவங்களை பிரித்தானிய அரசியலின் மையத்திற்கு கொண்டு வந்தவர். அதேபோல், இலங்கையின் கிராமப்புறச் சமூகப் பின்னணியில் இருந்து எழுந்த நீங்கள், தொழிலாளர்-விவசாயி சமூகங்களின் பொருளாதார நெருக்கடிகளை அரசியல் உரையாடலின் மையமாக்கியவர்.

இந்த ஒற்றுமை சாத்தியமான ஒரு சாதாரண ஒப்பீடு அல்ல் அது "அடித்தளத்திலிருந்து எழும் அரசியல்" என்ற பொதுவான தத்துவத்தை நினைவூட்டுகிறது.

அரசியல் மரபும் உருவாக்கமும்!

லம்மி, Labour Party என்ற சமூக ஜனநாயக மரபின் பிரதிநிதி. நீங்கள், Janatha Vimukthi Peramuna வழியாக மார்க்சிய-இடதுசாரி அரசியல் மரபில் உருவானவர்.

இருவரும் சமத்துவம், சமூகநீதி, மற்றும் அரசின் பொறுப்புணர்வு ஆகியவற்றை அரசியல் அடித்தளமாகக் கொண்டுள்ளீர்கள். ஆனால் உங்களின் பாதைகள் வேறுபட்ட அரசியல் அமைப்புகளால் வடிவமைக்கப்பட்டவை.

பிரித்தானியா - நீண்டகால நாடாளுமன்ற ஜனநாயக மரபைக் கொண்ட நாடு. லம்மி அதன் அமைப்புக்குள் செயல்பட்ட சீர்திருத்தவாதி.

இலங்கை - உள்நாட்டுப் போர், இன மோதல்கள், பொருளாதார வீழ்ச்சி, அரசியல் நிலையின்மை ஆகியவற்றைக் கடந்த சமூகம். உங்கள் எழுச்சி, அமைப்பை சவாலுக்கு உட்படுத்திய மாற்று அரசியல் அலையின் வெளிப்பாடு.

"இனம்" மற்றும் "வர்க்கம்" - இரு அரசியல் அச்சுகள்!

லம்மியின் அரசியல் அடையாளம் - இனநீதியின் குரலாக எழுந்துள்ளது. உங்களின் அரசியல் அடையாளம் - வர்க்க நீதியின் குரலாக அமைந்துள்ளது.

லம்மி 2017இல் வெளியிட்ட Lammy Review மூலம் பிரித்தானிய நீதித்துறையில் கருப்பின மற்றும் சிறுபான்மை மக்களுக்கு எதிரான அமைப்புசார் பாகுபாடுகளை வெளிச்சமிட்டார். "Structural injustice" என்ற கருத்தை அவர் அரசியல் ஆயுதமாக மாற்றினார்.

நீங்கள் - ஒருகாலத்தில் இன அரசியலின் மாயையில் சிக்குண்ட இயக்கத்தின் வாரிசாக இருந்தபோதிலும் - பின்னர் வர்க்க அடிப்படையிலான பொருளாதார அநீதியை மையப்படுத்திய புதிய அரசியல் திசையை உருவாக்கினீர்கள்.

இங்கே முக்கியமான கேள்வி: இனம் மற்றும் வர்க்கம் - இவை ஒன்றை ஒன்று நிராகரிக்கும் கருத்துகளா? அல்லது பரஸ்பரம் பூர்த்தி செய்யும் அச்சுகளா?

இலங்கை போன்ற பல இன, பல மொழி, பல மதச் சமூகத்தில் - வர்க்க அரசியல் மட்டும் போதாது; இன அநீதியையும் நேரடியாக எதிர்கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது. அதேபோல், இன சமத்துவம் மட்டும் - பொருளாதார அநீதியை தீர்க்காது.

அமைப்புக்குள் சீர்திருத்தமா? அமைப்பின் மறுசீரமைப்பா?

லம்மியின் நடைமுறை - அமைப்புக்குள் சீர்திருத்தம்.

உங்களின் அரசியல் இலக்கு - 77 ஆண்டுகளாக பழைமை பேணிய அரசியல்-பொருளாதார அமைப்பை மறுசீரமைத்தல்.

பிரித்தானியாவில் லம்மி, கல்வி மற்றும் சட்ட அமைப்பின் வாயிலாக சமூக உயர்வை அடைந்தவர். அவர் Harvard Law School-இல் கல்வி கற்ற முதலாவது கருப்பினத்தவராக உயர்ந்தது அவரது அரசியல் குரலுக்கு உலகளாவிய பரிமாணம் சேர்த்தது.

அவர் UK Parliament உறுப்பினராக 2000 முதல் செயல்பட்டு, Tony Blair மற்றும் Gordon Brown ஆட்சிக்காலங்களில் அமைச்சுப் பொறுப்புகளை வகித்துள்ளார். பின்னர் Keir Starmer தலைமையிலான கட்சியின் மீளுருவாக்கப் பயணத்தில் மையக் குரலாகத் திகழ்ந்தார்.

அதாவது, லம்மி - அமைப்பை உடைக்காமல் மாற்ற முயன்றார். நீங்கள் - அமைப்பை உடைத்து மறுவடிவமைக்க முனைந்திருக்கிறீர்கள்.

இலங்கை - சிங்கப்பூரா? அல்லது புதிய மாதிரியா?

"இலங்கை சிங்கப்பூராக முடியுமா?" என்ற கேள்வி, வெறும் பொருளாதார வளர்ச்சி குறித்ததல்ல. அது நிர்வாக திறன், ஊழல் கட்டுப்பாடு, சமூக ஒற்றுமை, கல்வி தரம், நீதித்துறை சுயாதீனம், மற்றும் சமத்துவ அரசியல் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பை குறிக்கிறது.

லம்மியின் அனுபவம் - இன சமத்துவத்தை அரசியல் மற்றும் சட்ட அமைப்புகளின் மையத்தில் நிலைநிறுத்துவது எப்படி என்பதைக் கற்றுத்தருகிறது.

உங்களின் அனுபவம் - ஊழல் எதிர்ப்பு, வள மேலாண்மை, மற்றும் வர்க்க அநீதியை சீர்செய்யும் பொருளாதார மறுசீரமைப்பு.

இவை இரண்டும் இணைந்தால் என்ன?

- பொருளாதார நீதி + இன சமத்துவம்
- நிர்வாக சீர்திருத்தம் + சட்ட அமைப்பு சீர்திருத்தம்
- வர்க்க விடுதலை + சமூக ஒற்றுமை

இவை இணைந்தால், இலங்கை "சிங்கப்பூர்" என்ற ஒப்புமையைத் தாண்டி - தனது சொந்த சமூகநீதி மாதிரியை உருவாக்கும் திறன் பெறும்.

அரசியல் ஒற்றுமையின் சாத்தியம்!

லம்மி - கருப்பின சமூகத்தின் குரலாக பிரித்தானிய அரசியலில் உயர்ந்தவர்.

நீங்கள் - இலங்கையில் வர்க்க அரசியலை மீண்டும் மையப்படுத்திய தலைவர்.இருவரின் வாழ்க்கைப் பயணமும் ஒரு பொதுவான உண்மையைச் சுட்டுகிறது:

அரசியல் தலைமை என்பது மரபுசார் உயர்குழாமின் உரிமை மட்டும் அல்ல; சமூகத்தின் அடித்தளங்களில் இருந்து உருவாகும் அனுபவம் வாய்ந்த ஆளுமைகளும் ஆட்சியின் உச்சியைத் தொட முடியும்.

தோழரே!

லம்மியின் இன சமத்துவ அரசியல் அனுபவத்தை - உங்கள் வர்க்க விடுதலை அரசியலுடன் இணைத்து, இலங்கையில் அமைப்புசார் அநீதியின் அனைத்து பரிமாணங்களையும் ஒருங்கிணைந்து எதிர் கொண்டால், இந்தத் தீவில் ஒரு பொருளாதார மாற்றத்தை மட்டுமல்ல, ஒரு சமூக மறுபிறப்பையும் நாம் வாழும் காலத்தில் காணமுடியும்.

அப்போதுதான் "இலங்கை சிங்கப்பூர் ஆகுமா?" அல்லது "இலங்கை தனது சொந்த நீதிசார் மாதிரியை உலகிற்கு காட்டுமா?" என்ற கேள்விகளுக்கு விடைகிடைக்கும்.



-----------------------------------------------------------------------------

***குறிப்பு:***

***துணைப்பிரதமர் David Lammy குறித்து பிரித்தானியாவில் விமர்சனங்கள் உண்டு என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.***

*#TamilPoliticalWriting #ஞாபகங்கள் #nadarajarah_kuruparan #journalist #tamilpolitics #நடராஜாஜகுருபரன் #AKD #ANURAKUMARADISSANAYAKE #HariniAmarasuriya #TilvinSilva #LalKantha #VijithaHerath #WasanthaSamarasinghehe #NPP #NPPGovernment #LalKantha #uk #labrador #DavidLammy*

***இந்தப்பதிவு நடராஜா குருபரன் அவர்களின் தனிப்பட்ட பதிவு. அதற்கு முழுமையாக அவரே பொறுப்பு. ஆரோக்கியமான விவாதங்கள், கருத்தியல் ரீதியான விமர்சனங்கள் மகிழ்வுக்க உரியதாக இருக்கும்.***

(8 பக்கம் தொடர்ச்சி)

My objective during my trip to India was simple: turn Canada's competitive advantages into future trading opportunities.

In Goa, I met with Minister Hardeep Singh Puri, India's Minister of Petroleum and Natural Gas, where we officially reinstated the Canada–India Ministerial Energy Dialogue. This renewed dialogue creates a sustained government-to-government platform focused on bringing clean and conventional Canadian energy – areas where Canada has world-class products to sell and India has enormous demand – to India.

Restarting the Ministerial Dialogue may sound like government-speak. But this matters because India's energy sector is largely state-directed. Clear policy alignment and an endorsement of Canada by Minister Puri sends a powerful signal to Indian buyers and investors that Canada is open for business and a priority market for them to look to as they scale up to meet national demand.

On LNG alone, India aims to increase the share of natural gas in its energy mix to 15 percent by 2030, up from roughly six percent today. Beginning this past June, Canada has started shipping LNG from our west coast, so we are well-positioned to help meet that demand with reliable, responsibly-produced LNG, supporting India's energy security while lowering global emissions.

Beyond oil and gas, while in New Delhi, I met with India's Ministers of New and Renewable Energy, Heavy Industries, and Chemicals and Fertilizers. Our discussions covered clean power deployment, industrial decarbonization, fertilizer supply chains, critical minerals, electric vehicles, and advanced manufacturing. In each case, the message was clear: Canada has what India needs, and India offers a market that provides significant opportunities for Canadian companies.

On critical minerals, we made tangible progress. India recently launched a $4-billion National Critical Minerals Mission to secure inputs like lithium, copper, and cobalt — minerals Canada produces to some of the highest environmental and labour standards in the world. We agreed to formalize cooperation between our two countries in the coming weeks, and I was pleased to invite India's Minister of Mines to attend the PDAC mining conference in Toronto this March.

Ultimately, this trip reflects Canada's new, pragmatic approach to global engagement: building strength at home while diversifying abroad, so we are never dependent on any single market again.

Canada is a stable democracy, a trusted supplier, and a dependable long-term partner in an increasingly volatile global economy. We have low-cost, low-carbon energy. We have responsibly sourced critical minerals. And with our Pacific gateway now fully open, we are well-positioned to serve growing Asian markets.

# இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** பிரச்சனைகள் முடிவிற்கு வரும். மாற்று மருத்துவம் பலன் தரும். உடல்நலம் சீராகும். வியாபாரம் சுமாராக இருக்கும். ஊதிய உயர்வு கிட்டும். அலைச்சல்கள் அதிகரிக்கும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். திருப்தி பெருகும். நிர்வாகச் செலவுகள் கூடும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். தேக ஆரோக்கியம் மிளிரும். தொழில் அபிவிருத்தி ஏற்படும். மாணவர்கள் பாராட்டு பெறுவர். சந்தோஷம் பெருகும்.

*அதிர்ஷ்ட எண்: 9,1,8,3, அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* O,F




**தனுசு:** வெளியூர் பயணம் வெற்றி தரும். ஆரோக்கியம் பாதிக்கும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகரிக்கும். பணியில் கவனம் தேவை. குடும்ப சச்சரவு ஏற்படும். அரசியல் ஆதாயம் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. வேலைபளு கூடும். பொருள் நஷ்டம் ஏற்படும். அலட்சியப் போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும். முயற்சி பலன் தரும். முடிவுகள் சாதகமாகும். உறவுகளால் நன்மை உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. ஆதலால் கவனம் தேவை. உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டு பெருகும். புதிய தொழில் அமையும். வீண் விரயம் அதிகமாகும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். வேண்டாத விஷயங்கள் விலகும். பணியாட்கள் தொல்லை ஏற்படும். வாகனச் செலவு உண்டு. பாதகம் விலகும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பொருள்சோதம் தரும். கல்வி மேன்மை தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. பிரார்த்னை நிறைவேறும். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். அறிவாற்றல் பளிச்சிடும். புதிய பதவிகள் கிட்டும். தன்னம்பிக்கை கூடும். வேண்டாத நபர் விலகுவர். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கைகூடும். வாகன அபிவிருத்தி உண்டு. எந்திர தொழில் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும்.

*அதிர்ஷ்ட எண்: 8,4,6,2, அதிர்ஷ்ட நிறம்: கருமை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* Y,A




**மகரம்:** கமிஷன் தொழில் லாபம் தரும். தோல்வி நிலை மாறும். தொழில் வர்த்தகம் நடைபெறும். வெற்றிக்கான வழி பிறக்கும். விவசாயம் நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் நிறைவேறும். குதூகல பயணம் உண்டு. குடும்ப மேன்மையுண்டு. திருமணம் கைகூடி வரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். நிதி நிறுவனம் லாபம் தரும். உடல்நலனில் கவனம் தேவை. பற்றாக்குறை நீங்கும். சகோதாரிளால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் உருவாகும். முத்தான வாய்ப்பு பெருகும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கடன் சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச் செலவு அதிகரிக்கும். நோய் நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். பயணம் தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு வேலை பளு கூடும். பயணங்களால் பணம் கரையும். கண் சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பாக்கிகள் வசூலாகும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வீடு தேடி வரும். பணிவான பேச்சுக்கள் தேவை. மனக்கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் நிறைவேறும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். புதிய கடன் வாங்க நேரிடும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கலைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் சாதகமான காலம். சகோதரியினால் நன்மை உண்டு. களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும்.

*அதிர்ஷ்ட எண்: 4,6,5,8, அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* K,A




**கும்பம்:** தேக ஆரோக்யம் சீராகும். மறைமுக தொல்லை நீங்கும். உடல் ஆரோக்கியம் கூடும். வழக்கு வெற்றி தரும். புத்திர வழியில் தொல்லையுண்டு. புதியபொருள் சேர்க்கையுண்டு. வியாபார வாய்ப்பு உண்டு. கடன்பிரச்சனை தீர்வு உண்டு. கல்வியில் ஏமாற்றம் உண்டு. மேலதிகாரியின் ஆதரவு உண்டு. குடும்பத்தில் சஞ்சலம் உண்டு. தன வரவில் தாமதம் உண்டு. தகுதியில் மேன்மை உண்டு. மாணவர்களுக்கு மகிழ்ச்சியான காலம். இனிப்பான செய்திகள் வரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். முதலீடுகளில் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். மனநெருக்கடிகள் தீரும். மனமகிழ்ச்சி கூடும். மேன்மையான காலம். விவேகமான பேச்சுக்கள் குறையும். வீண் வம்பு அகலும். தந்திரமாக செயல்படுவீர்கள். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சித் தரும். சொத்துக்களால் லாபம் தரும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பெற்றோர்களின் அன்பு கூடும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. உறவினர் பகை ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வாழ்க்கையின் பிடிப்பு அதிகரிக்கும். பெண்களுக்கு அணிகலன் சேரும். யோகப் பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். பாராட்டுக்கள் கூடும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வருமான திருப்தி தரும். புது முயற்சிகளை தள்ளிப் போடவும். பெருமிதம் நிறைந்த காலம். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட எண்: 3,7,1,4, அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* M,R




**மீனம்:** மகிழ்ச்சியான செய்தி வரும். நிர்வாக பொறுப்பு கூடும். வருமானம் உயரும். உடல் உபாதை நீங்கும். கொள்கையில் பிடிப்பு சேரும். கொடுக்கல், வாங்கலில் நன்மை சேரும். உறவினர் தொல்லை நேரும். பிள்ளைகளால் பெருமை சேரும். வியாபர வளர்ச்சி உண்டு. ஆன்றோர் ஆசி உண்டு. அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். அதிகாரியின் ஆதரவு பெருகும். ஆரோக்கியம் அபிவிருத்தி உண்டு. கடன் சுமை குறையும். பருப்பு தானம் பாவம் போக்கும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். பணம் புரளும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். வாழ்க்கைத்துணையால் வளம் பெருகும். கடன் பாக்கிகள் வசூலாகும். வரவுகள் திருப்தி தரும். வாகன யோகம் உண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். ஆபத்துக்கள் விலகும். பயண முயற்சி பலன் தரும். நினைத்த விஷயம் நிறைவேறும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். பாதகமான சூழ்நிலை விலகும். உடல்நலம் கவனம் தேவை. பிள்ளை வழிச் செலவுகள் அதிகரிக்கும். மெத்தனப்போக்கு விலகும். ஞாபக மறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை. திருமண வாய்ப்பு கூடி வரும். உடல் உபாதை அதிகமாகும். குடும்ப ஒற்றுமை நிறையும். குதூகலம் அதிகமாகும். மனோபயம் நீங்கும். மருத்துவச் செலவு குறையும். கனவுத்தொல்லை உண்டு. நிதி நிலைமை சீராகும். எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பிணிகள் நீங்கும். பல்வலி வந்து நீங்கும். பெண்களின் கௌரவம் உயரும்.

*அதிர்ஷ்ட எண்: 5,8,4,6, அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* L,H

---

*(17 பக்கம் தொடர்ச்சி)*

## *இந்திய செயற்கை நுண்ணறிவு (AI) மாநாட்டில் எமது அநுர குமார*

**தமிழ் தேசிய அரசியல் நிலைமை மற்றும் பிராந்திய ராஜதந்திர மாற்றங்கள் - ஒரு ஆய்வுப் பார்வை**

---------------------------------------------------------------------------------------------------------
--

இந்த சூழலில், வடக்கு-கிழக்கு இணைப்பு 13ஆம் திருத்தச் சட்டத்தை காணி பொலிஸ் அதிகாரங்களோடு முழுமையாக அமுல்படுத்துதல், அரசியல் அமைப்பினூடான அதிகார பரவலாக்கம் போன்ற கோரிக்கைகளை இந்தியா இலங்கையிடம் வலியுறுத்த வேண்டும் என தமிழர் தரப்பில் இருந்து இராஜதந்திரத்தோடு மக்கள் பலத்தொடு வலிமையாக வலியுறுத்துவதற்கான தமிழரின் அரசியல் வலிமை தற்போது குறைந்ததாகவே காணப்படுகிறது. தமிழ் தேசிய கட்சிகள் மற்றும் அரசியல் இயக்கங்கள் புதிய தலைமுறை தலைவர்களை உருவாக்காத நிலையிலும் புளிச்சுப்போன அரசியல் நகர்வுகளும், இராஜதந்திரமற்ற வெற்று வாய்சவாடல் அரசியலும், குழிபறிப்பு அரசியலுமாக தமிழர அரசியல் மிகச் சுருங்கி போய் உள்ளது.

இதனுடன் ஒப்பிடும்போது, முன்னர் இந்தியாவை விமர்சித்ததாக கருதப்பட்ட ஜேவிபி தற்போது இந்தியாவுடன் நெருங்கிய ராஜதந்திர உறவுகளை மேற்கொண்டு வருகின்றன என்பது இராஜதந்திர அரசியல் வளர்ச்சியின் மைல் கல் வளர்ச்சியாக பார்க்கப்படுகிறது. குறிப்பாக ஜேவிபி (JVP) மற்றும் அதனுடன் தொடர்புடைய தலைவர்கள் - அனுரகுமார திசாநாயக்க மற்றும் ரில்வின் சில்வா உள்ளிட்டோர் - இந்தியாவையும் சீனாவையும் ஒரே நேரத்தில் இராஜதந்திரமாக மிக நேர்த்தியாக கையாள்கிறார்கள். இது அவர்களின் வெளிநாட்டு அரசியல் அணுகுமுறையில் ஏற்பட்ட பெரு மாற்றத்தை வெளிப்படுத்துகிறது. இரு நாடுகளுடனும் தொடர்புகளை பராமரித்து தங்களது அரசியல் மற்றும் பொருளாதார நலன்களுக்கு ஏற்ப பூகோள அரசியலை கையாளும் கலையை சாதுர்யமாக செய்கிறார்கள்.

அண்மைக் காலத்தில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் அரசியல் மற்றும் பாதுகாப்பு காரணங்களால் எதிர்மறையான உறவுகளைக் கொண்டிருந்தது, பெரும் பகை நாடுகளாக பார்க்கப்பட்டது. அந்த பின்னணியில் குறிப்பாக விளையாட்டு துறையில் கூட நேரடி போட்டிகளில் ஈடுபடத் தயங்கிய சூழ்நிலைகள் காணப்பட்டன. இத்தகைய பின்னணியில், இலங்கை அரசின் அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தரப்பு பாகிஸ்தான் மற்றும் இந்திய அரசியல் தலைவர்களுடனும், விளையாட்டு நிர்வாகத்தினருடனும் மிக இராஜதந்திரனாக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர். இவ்வாறான ராஜதந்திர முயற்சிகளின் மூலம் இரு நாடுகளின் அணிகளும் போட்டியிடும் சூழ்நிலையை உருவாக்கியது. இரு நாட்டின் அணிகளையும் இலங்ககியில் மோத செய்து பல கோடி கண்களை பார்க்க வைத்தது.

இதற்காக பாகிஸ்தான் தலைவர்கள் இலங்கை அரசுக்கு அவர்களது பாராளுமன்றத்தில் பாராட்டுகளை தெரிவித்திருந்தனர்.

பாருங்கள் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் ஆகாது, சீனாவுக்கும் இந்தியாவுக்கும் ஆகாது, சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஆகாது ஆனால் அத்தனை வல்லாதிக்கங்களையும் சிறிய நாடான இலங்கை அரசு எப்படி மிக இராஜதந்திரமாக கையாள்கின்றது. இது தான் அச்சு அசலான இராஜதந்திரம்.

சிங்கள அரசியல் தலைமையின் பின்னால் அமைக்கப்பட்டுள்ள ராஜதந்திர வலையமைப்பு மற்றும் அதனை நுணுக்கமாக இராஜதந்திரிகள் சிங்கள இனத்தில் இருந்து வளர்ச்சி பெற்றதே இதற்கான காரணங்கள்.

இதற்கு மாறாக, தமிழ் அரசியல் வரலாற்றின் பின்னணியில் 30 வருட ஆயுதப் போராட்ட வரலாறு மற்றும் அரசியல் விடுதலைக்கான முயற்சிகளை முன்வைத்ததாக கருதப்படும் இனம், உலகை ஆண்ட தமிழ் இனம் என மார்தட்டும் ஈழ தமிழர் அரசியலோ ஒரு இராஜதந்திரமும் அற்று, இன விடுதலைக்காக நவீன உலக அரசியலில் புதுமையானபரசியல் யலைமைகள் உருவாகமல், கைதேர்ந்த இராஜதந்திர விற்பனனர்கள் உருவாகாமல் தனி மனிதவரசியல் செய்யும் வெறு நாறிப்போன, ஒன்றுக்கும் உதவாத அரசியலையே கட்டமைத்திருக்கிறார்கள்.

தற்போதைய காலகட்டத்தில் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் தமிழர்கள் பல அரசியல் சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். உள்நாட்டு முரண்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்பு குறைவு காரணமாக தமிழ் தேசிய அரசியல் பலவீனமடைந்துள்ளதாகவும், எதிர்காலத்தில் உலக நவீன அரசியல் போக்குக்கு ஏற்றால் போன்ற புதிய அரசியல் தலைமுறை உருவாக வேண்டிய அவசியம் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இல்லையெனில் தமிழ் தேசிய அரசியல் என்பது அடுத்த தசாப்தத்திற்குள் வழக்கொழிந்து போய்விடும்.

**கு.மதுசுதன் -- B.Sc(Hons), M.Sc**
**அரசியல் ஆய்வாளர்**

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US



# NESAN
# 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164




26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1559 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 20, 2026




# 70 பில்லியன் டொலர் போக்குவரத்துத் திட்டத்தின் கீழ் "ஒன்றாறியோ லைன்" விரிவாக்கப் பணிகள் ஆரம்பமாகிவிட்டன என்கிறார் ஒன்றாரியோ மாகாண அமைச்சர் விஜேய் தணிகாசலம்!

வட அமெரிக்காவிலேயே மிகப்பெரிய போக்குவரத்து விரிவாக்கத் திட்டமான ஒன்றாறியோ அரசின் 70 பில்லியன் டொலர் திட்டத்தின் கீழ், "ஒன்றாறியோ லைன்" உயர்மட்டப் பாதை மற்றும் நான்கு புதிய நிலையங்களுக்கான கட்டுமானப் பணிகள் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் ஸ்கார்பரோவின் மத்திய பகுதிக்கு விரைவான போக்குவரத்துச் சேவையைக் கொண்டு சேர்க்கும் ஸ்கார்பரோ சுரங்கப்பாதை விரிவாக்கத்தையும் உள்ளடக்கியது.

இது தொடர்பாக ஒன்றாரியோ மாகாணத்தின் இணைஅமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் கூறுகையில், இப்பெருந் திட்டங்கள் பயண நேரத்தைக் குறைப்பதோடு, மக்களை வேலைவாய்ப்புகளுடன் இணைத்து வலிமையான சமூகங்களை உருவாக்கும் என்றார். ஸ்கார்பரோ குடியிருப்பாளர்களுக்கு இது ரொறன்ரோ நகர மத்தியுடனான இணைப்பை மேம்படுத்தி, உலகத்தரம் வாய்ந்த போக்குவரத்துச் சேவையை உறுதி செய்யும்" என்றார்.


# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் 8 தங்க பதக்கங்களை பெற்ற மருத்துவ பீட மாணவி நற்குணம் அபிராமி!



யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா 19ம் திகதி வியாழக்கிழமை அன்று நடைபெற்றபோது க மருத்துவ பீடத்தை சேர்ந்த நற்குணம் அபிராமி என்ற மாணவி 8 தங்கப் பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

கனடா உதயன் ஆசிரியர் பீடமும் மருத்துவ கற்கையில் சாதனை படைத்த எதிர்கால மருத்துவத்துறை கலாநிதி நற்குணம் அபிராமி அவர்களை வாழ்த்துகின்றது.

(தொடர்ச்சி 4ம் பக்கம்)



# முன்னாள் – இன்னாள் எம்.பி.களுக்கு அநுரகுமார அரசு வைத்த "ஆப்பு"

*"முன்னாள் ஜனாதிபதி, பிரதமர்,அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என 330 பேருக்கும் 182 மறைந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக மக்கும் என 512 பேருக்கு இவ்வாறு ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது. இதற்கமைய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்திற்காக அண்ணளவாக மாதமொன்றுக்கு 3.5 கோடி ரூபா வரையில் செலவிடப்படுகின்றது"" கே.பாலா*

இலங்கை சனத்தொகை 2 கோடி 17 இலட்சமாகவுள்ள நிலையில் இந்தளவு குறைந்த மக்கள் தொகையுள்ள நாட்டுக்கு 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற எண்ணிக்கை மிக அதிகமானது என்ற விமர்சனங்களும் இந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகள், கொடுப்பனவுகள், சலுகைகள் ,ஓய்வூதியம் குறித்து கடும் குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வளாகத்தில் புதிய "அன்னபூரணி" கலாசார மண்டபம் திறந்து வைக்கப்பெற்றது!

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்ட அன்னபூரணி கலாசார மண்டபம் 14ம் திகதி அன்று சனிக்கிழமை (14) மாலை 3.30 மணியளவில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

குறித்த மண்டபத்தை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவி அபிராமி கைலாசபிள்ளை கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

இதன் போது திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபையின் தலைவர் ராமகிருஷ்ணன், திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபையின் செயலாளர், பொருளாளர், உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள், அப்பகுதி மக்கள், என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

இதன் போது அன்ன பூரணி மட நிர்வாக உறுப்பினர்களும்கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



